ஆனந்த போதினி.

ஜனவரி, 1926

2


ന211,N1588
N26·11·7
169834

uary. 1926. குரோதன



# ஆனந்த போதினி

# ANANDA BODHINI.

Vol. 11. பொருளடக்கம் No. 7.


| | பக்கம். |
|---|---|
| 1. கடவுள் வணக்கம் | ... 257 |
| 2. அரும் பத விளக்கம் | ... 258 |
| 8. உலக அமைப்பின் விநோதம் | 260 |
| 4 செல்வச் சிறப்பு | ... 268 |
| 5. சங்கிராந்தி—பொங்கலோ பொங்கல் | ... 266 |
| 6. மொழி | ... 269 |
| 7. ஆத்திசூடி உதாரணக் கதைகள் | 278 |
| 8. பன் மொழிக் கோவை | ... 276 |
| 9. தனித்தமிழும் ஆங்கிலமும் | ... 279 |
| 10 நாலடியா வசனம | ... 281 |
| 11. ஆரிய சித்தாந்தம் | ... 284 |
| 12. நத்தைச்சூரி-ஓர் நல்ல பானம் | 288 |
| 13. நாய் கடிக்கு ஓர் நல்ல மருந்து | 289 |
| 14. பகவத்கீதை வசனம் | ... 289 |
| 15. அம்பாவிகை அல்லது அதிசய மரணம் | ... 292 |
| பொது சமாச்சாரங்கள் | ... 295 |
| சாங்கம் | ... 296 |
| ங்கள் | |


ஊ211, N15PB
N26. 11.7
169834



# "ஆனந்தபோதினி"

## சந்தா விவரம்.

| | | ரூ. அ. பை. |
|---|---|---|
| வருடம் 1-க்கு தபாற்கூலி யுட்பட | இந்தியா, பர்மா, ஸிலோன் ... ... | 1—0—0 |
| | பினங், ஸிங்கப்பூர், தென்னாப்ரிகா, பசரா, மெசபொடோமியா முதலிய வெளி நாடுகளுக்கு | 1—4—0 |
| நடந்துகொண் டிருக்கிற வருடத்திய தனிச் சஞ்சிகை விலை | | 0—2—0 |
| சென்ற வருடங்களுடைய தனிச் சஞ்சிகை விலை | | 0—3—0 |

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

---

(1) சந்தாதாரராய்ச் சேருகிறவர்கள் பூரணமாய்ப் பெயரை எழுதி யனுப்பவேண்டும்.

(2) சந்தா தொகையை முன்னாடி செலுத்தியாவது அல்லது வி.பி. யில் பணம் கட்டியாவது பெற்றுக்கொள்ளவேண்டும். எப்போது சேர்ந்தாலும் அவ்வருட ஆடிமாத முதல்தான் கணக்கு வைக்கப்பட்டு ஆடிமாத சஞ்சிகை முதல், சேர்த்தனுப்பப்படும்.

☞ (3) சஞ்சிகை வி. பி. யில் வரவழைப்போர் ரிஜிஸ்டர் சார்ஜ் 2-அணாவோடு (18-4-1921 முதல் மணியார்டர் கமிஷன் 10-ரூபா வரையில் 2-அணா வாகையால்) வி. பி. கமிஷன் 2-அணா வி. பி.க்கு தபால் சார்ஜ் 0-0-6. ஆக 0-4-6 அதாவது 5-அணா சேர்ந்து ரூபா 1-5-0 கட்டி வி. பி. யைப் பெறவேண்டும். மணியார்டர் அனுப்பினால் 1-2-0 மட்டுமே யாகும். ஆதலால் முன்னாடி மணியார்டர் அனுப்பிப் பெற்றுக்கொள்வதே நலம். இதைக் கவனிக்கவும்.

(4) யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் அவர்கள் அம்மாதம் 15-ம் தேதிவரையில் பார்த்து அதற்குமேல் அதே தமிழ்மாத முடிவிற்குள் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும். பிறகு தெரிவிப்போர் விலைய னுப்பிப் பெறவேண்டும்.

(5) இடம் மாறும் சந்தாதாரர்கள் அந்தந்த சஞ்சிகை தங்களுக்குப் புது விலாசத்திற்கு வந்து சேரும்வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துகொண்டு நமக்குப் புதுவிலாசத்தை யறிவிக்கவேண்டும். இன்றேல் அடுத்த சஞ்சிகை பெரும்பாலும் பழைய விலாசத்திற்கே போய்விடும். அதற்கு நாம் பொறுப்பாளியல்ல.

(6) சந்தா நம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப் படமாட்டா. அத்தகைய கடிதங்களால் நேரிடும் தவறுதல்களுக்கு நாம் பொறுப்பாளியல்ல பதிலை விரும்புவோர் ரிப்ளை கார்டாவது தபால் ஸ்டாம்பாவது அனுப்பினாலன்றி விடையளிக்கப்பட மாட்டாது

(7) வியாசங்களை எழுதுவோர் சுத்தமாக இலக்கணப் பிழையின்றித் தங்கள் உண்மைப் பெயருடன், மதநிந்தனை, பிறர் நிந்தனை, ராஜத்வேஷ விரோதம் முதலியவையின்றியும், பொது ஜனங்கள் விரும்பக்கூடியனவாகவும் எழுதவேண்டும். வியாசங்களைத் திருத்தவும், அவற்றிலுள்ள சில விஷயங்களைக் குறைக்கவும், கூட்டவும், அவற்றைப் பிரசுரிக்காமல் நிறுத்தவும் எமக்கு பாத்தியமுண்டு. எவ்வித காரணத்தைக்கொண்டும் வியாசங்கள் திருப்பியனுப்பப்படமாட்டா. வியாசக்காரர் அபிப்பிராயங்கட்கு நாம் பொறுப்பாளியாகோம்.

---

| | | | |
|---|---|---|---|
| Life Subscription<br>ஜீவிய சந்தா | இந்தியா, பர்மா, சிலோன் | ரூபா | 15—0—0 |
| | அன்னிய நாடுகளுக்கு | ,, | 20—0—0 |

நா. முனிசாமி முதலியார். "ஆனந்தபோதினி" ஆபீஸ்
நெ 6, வெங்கடேசமேஸ்திரி தெரு. தபால்பெட்டி நெ. 167, [illegible]

(133 ... 1-26
OFFICE ... 17 FEB 1926 ... MADRAS

ஓம்
பரப்பிரம்மணே நம :

# ஆனந்தபோதினி

---

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

| தொகுதி | குரோதன ஆண்டு தைமீ க | பகுதி |
|---|---|---|
| 11 | 1926ஆண்டு ஜனவரிமீ 14உ | 7 |

## கடவுள் வணக்கம்.

---

சாக மோடெழு கலைக ளாய் நரிகள்
சற்று சோறிடு தருத்தியைக்
காலி ரண்டு கவ வாசல் பெற்றவளர்
காம வேணடன சாலையை
மோக வாசைமுறி யிட்ட பெட்டியையும்
மலமி ருந்தொழுகு கேணியை
மொய்த்து வெங்கிருமி தத்து கும்பியை
முடங்க லார்கிடை சாக்கியை
யாக வித்ரதனு மின்னை யொத்திலக
வேத மோதிய குலாலனார்
வினைய வெய்யதடி கார னையமன்
வந்த டிக்குமொரு மட்கலத்
தேக மானபொயை மெய்யெ னக்கருதி
யைய வையமிசை வாடவோ
தெரிவ தற்கரிய பிரம மேயமல
சிற்சு கோதய விலாசமே. (1)

---

பொன்னை மாதரைப் பூமியை நாடிடேன்
என்னை நாடிய வென்னுயிர் நாதனே
உன்னை நாடுவே னுன்னருட் டூவெளி
தன்னை நாடுவன் றன்னந் தனியனே. (2)

---

தன்ன தென்றுரை சற்று மவளவொம்
இன்ன தென்றனை யின்னிடத் தேதந்தே[illegible]
இன்ன மென்னை யிடருறக் கூட்டினு[illegible]
பின்னை புய்யிலன் பேதைய னுவே[illegible] (3)

[illegible] 1926

## அரும் பத விளக்கம்.

1. மக்கள் சரீரம் முத்தியின்பத்தைப் பெறுவதற்குங் காரணமாயிருந்தாலும் மாயையின் சம்பந்தமுள்ள பிரபஞ்சத்தில் அது பெரிதும் மக்களுக்குக் கேட்டை விளைத்தலால் அதனை இப்பாடலில் இகழ்ந்து பேசுகிறார்.

காக முதலிய பட்சிகளும், நாய் முதலிய மிருகங்களும் உடலைப் பிடுங்கித் தின்பதற்கு ஆசைகொண்டிருக்கும். ஆதலால் அதனை 'காகமோடு கழுகலகை நாய் நரிகள் சுற்றுசோறிடு துருத்தி' என்றும், இரண்டு கால்களுடன் ஒன்பது துவாரங்களைக்கொண்டு சிற்றின்ப விஷயத்திற்கு ஆதாரமாய் நிற்றலால் 'காம வேள் நடன சாலை' யென்றும், 'மோக ஆசை முறி யிட்ட பெட்டி' என்றும், ஆணவம், மாயை, காமியம் என்னும் மூன்று மலங்களும் நிகழ்வதற்கு இருப்பிடமாதலால் 'மும்மல மிகுந் தொழுகேணி' என்றும், புழுக்களுக்கு உறைவுளாதலின் 'மொய்த்து வெங்கிருமி தத்துகும்பி' என்றும், 'முடங்கலார் கிடை சரக்கு' என்றும், வானத்திற் படரும் மேகத்திற் றோன்றுகின்ற இந்திரவில்லானது இன்னகாலத்தில் இன்னவிதமாகத் தோன்றுவது என்னும் நியமமின்றி நம்மால் எதிர் பார்க்கப்படாத ஒருகாலத்தில் வெவ்வேறு உருவினதாய்த் தோன்றி உடனே உருமறைந் தொழிதல் போல நமது தேகமும் உண்டாகி நிலையின்றி மறைந்துபோகக் கூடியதாதலின் 'மாத விந்த்ரதனு மின்னை யொத்திலக' என்றும், பிரமனால் சிருஷ்டிக்கப்பட்டு யமனால் அழிக்கப்படுதலின் 'வேத மோதிய............வர்தடிக்கு மொரு மட்கலம்' என்றும் கூறினர், இதனால் இப்பிறவியும் கூடாதென்பது கருத்து.

"மின்னின் நிலையில, மன்னுயி ராக்கைகள்
என்னு மிடத்திறை, புன்னு மினீரே"

என்றார் பிறரும்.

"எரியெனக் கென்னும் புழுவோ வெனக்கென்னும்
இந்த மண்ணும்
சரியெனக் கென்னும் பருந்தோ வெனக்கெனும்
தான் புசிக்க
நரியெனக் கென்னும்புன் னாயெனக் கென்னுமிந்
நாறு டலைப்
பிரியமுடன்வளர்த் தேனித னாலென்ன
பேறெனக்கே"

என்று பட்டினத்தாரும்,

"நாய்நம தெனநரி நமதெ னப்பிதா
[illegible] தெனநமன் றனதெ னப்பிணி
[illegible] தெனமனம் மதிக்கும் பெற்றிபோ
[illegible] ப்பமும் யாக்கை யாரதே"

169834



என்று திருவிளையாடற் புராணமுங் கூறுவ விங்குக் கவனித்தற் குரியனவாம்.

மற்றும்,

"ஆங்காரப் பொக்கசம் கோபக் களஞ்சியம்
ஆணவத்தால்
தீங்கா அரண்மனை பொய்வைத்த கூடம்வினை
வீடு வளர்
தேங்கார் பெருமதில் காமவி லாசமித்
தேகம் கந்தல்
பாங்கா புனைப்பணிந் தெப்படி ஞானம்
பலிப்பதுவே"

என்று பட்டினத்தடிகள் பகருவதுங் காண்க.

இத்தன்மையான சரீரத்தைப் பெற்ற நாம் அது உள்ளபோதே முத்திப்பேற்றுக் குரித்தான நலங்களைத் தேடிக்கொள்ளவேண்டும். இறைவனது திருவருளானன்றி அம்மார்க்கம் சித்திப்பது அரிதாதலால் இவ்வண்ணம் முறை கூறுகின்றார்.

அலகை=பேய்.
துருத்தி=ஒருவித தோற்பை.
நவ வாசல்=கண் இரண்டு, காது இரண்டு, மூக்குத்துவாரம் இரண்டு, வாய் ஒன்று, குதம் ஒன்று, குய்யம் ஒன்று ஆக ஒன்பது.
காமவேள்=மன்மதன்.
முறி=முறிச்சீட்டு.
கேணி=கிணறு.
கிருமி=புழு.
தத்தல்=நெளிதல்.
கும்பி=நரகம்.
முடங்கல்=குற்றம்.
கிடைச் சரக்கு=விலையாகாத சரக்கு.
மாகம்=ஆகாயம்.
வேதம் ஓதிய குலாலன்=பிரமன்.
வனைதல்=செய்தல்.
அமலம்=பரிசுத்தம்.
சித்சோதய விலாசம்=ஞானகம் உதயமாகும் வீடு.

2. உயிரினுஞ் சிறந்த பொருள் உலகத்தில் இல்லையாதலாலும், அந்த உயிருக்கு இறைவன் நீ யாதலாலும் உன்னைவிட்டுப் பொன்னை மாதரைப் பூமியை நாடிடேன் என்று இப்பாடலில் சொல்லுகிறார்.

அருள் தூவெளி=அருளாகிய பரிசுத்தமான வெளி.

3. இறைவன் குருமூர்த்தங்கொண்டு எழுந்தருளிவந்து நீட்சிக்குங்காலத்தில் சீடனுடைய உடல், பொருள், ஆவி என்னும் மூன்றினையும் தன்

நாகக்கொண்டருளுவனுகவின், 'தன்னதென்னுரை சாற்றுவனவெல்லாம், நின்னதென்றனெ' என்றார்.

"அன்றே யென்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும், குன்றே யனையாய் எனையாட்கொண்ட போதேகொண்டிலையோ" என்று திருவாசகம் கூறுவது இங்குணரத்தக்கது.

"என்றுநீ யன்றுநான் உன்னடிமை" என்று இவரே பிறிதோரிடத்திற் கூறியதுங் காண்க.

---

# ஆனந்தபோதினி

குரோதன௵ தைமீ கஉ

## உலக அமைப்பின் விநோதம்.

"இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு"

என்னும் பொதுமறையின் முதுமொழியை நாம் சிறிது சிந்திப்போமானுல் உலகத்தின் அமைப்பு நமக்கு வியப்பைத் தராமற் போகாது. ஒருவர் தனவந்தராதலும் மற்றொருவர் அறிவாளராதலும் உலகத்தின்கண் அவரவர் செய்த வினைப்பயனால் ஏற்படும் இயற்கையைச் சார்ந்தவையா யிருக்கின்றன.

ஆனுல் பொருளைச் சம்பாதித்தலும், பாதுகாத்தலும், பயன்படச் செய்தலும் அறிவாளர்க்கே சாத்தியமானவை. ஆயினும் பெரும்பான்மையும் அறிவாளர் வறிஞராயும், அஃதில்லாதார் செல்வராயும் இப்பிரபஞ்சத்திற் காணப்படுவது விநோதமாகவே யிருக்கின்றது. இதனுல் அறிவாள ராவதற்குரிய ஊழ் செல்வராதற்கும், செல்வ ராவதற்குரிய ஊழ் அறிவாள ராதற்கும் பெரிதும் பொருந்துவதின்மை வெள்ளிடை மலையாம். ஆகவே இம்முறையால் மக்களுக்கு உயர்வு தாழ்வு என்னும் வித்தியாசப் படிகள் தலையெடுக்கின்றன.

பொதுவகையில், மக்க ளனைவரும் ஒத்த நிலையின ரென்பது நமக் குடன்பாடே. அங்ஙனமிருந்தும், உலக அமைப்பானு



ஒழுங்குடன் நடைபெறவேண்டியே மக்களுக்கு உயர்வு தாழ்வுகளையுண்டாக்கும் வினைப்பயன் துணைக் காரணமாகின்றது. இன்றேல், உலகத்திற்கும் உயிரில்லாத பொருட் காட்சிச் சாலைக்கும் வேறுபாடேது? எல்லோரும் ஒரே அந்தஸ்தின ராய்விடின் உலகவியல் ஒழுங்குபெறக் கூடுமோ? அனைவரும் சிவிகையேறின் சுமப்பவரின்றி அச்சிவிகை எவ்வாறு செல்லும்? இத்யாதி காரணங்களை முன்னிட்டே நமது முன்னோர் சமத்துவத்திற்குரிய மக்களிற் சிலரைத் தனிப்படுத்தி, வேதாகம முதலிய சாஸ்திர ராய்ச்சியிலமர்த்தி, உலகத்தில் நேரக்கூடிய சுபாசுப விஷயங்களை நமக் கப்போதைக் கப்போது அறிவிக்கவும் அவற்றிற்கான பரிகார முதலிய உபகாரணங்களைச் செய்துவரவும் வைத்தனர். இவ்வேலையி லமர்ந்த இவர்களின் சீவனோபாயத்தை ஏனையோர் கவனித்துவரலாயினர். இந்த வகுப்பினர்க்குப் பிராமணரென்னும் பெயர் இடப்பட்டது.

இவ்வண்ணமே உலக பாதுகாப்பின் பொருட்டுச் சிலரைப் பயிற்றுவித்து, அவர்களுக்கு க்ஷத்திரியரென்றும், உண்ண உடுக்க வேண்டியவற்றைக் கவனிக்க வேறு சிலரைப் பிரித்து அவர்களுக்கு வைசியரென்றும், இம் முத்திறத்தார்க்குங் குற்றேவல்புரிய மற்றவரை நியமித்து அவர்களுக்குச் சூத்திரரென்றும் பெயரிட்டனர். இந்த வகுப்புக்கள் நாளடைவில் பெருகி, பற்பல கிளைகளைக் கொண்டன. கொண்டபோதிலும் இவ்வித்தியாசம் உலகவொழுக்கிற்கேயன்றி மற்ற விஷயங்களில் ஒருவருக்கொருவர் சமத்துவமும் அன்பும் பாராட்டி வரவேண்டு மென்பதே ஆன்றோரின் கருத்தாம்.

ஆகையால் ஒவ்வொருவரும் அழிதற்குரிய தம்தம் பூத வுடம்பின் சுயநலத்தையே சாசுவதமெனக் கருதாது என்றும் அழியாதிருக்கக்கூடிய பொதுநல சம்பந்தமான புகழுடம்பின் காப்பாகிய அறத்தையே மதித்தொழுகவேண்டும். காலக் கடவுளின்முன் புலவன், பூபாலன், சமர்த்தன், வல்லமை யற்றவன், தனவந்தன், வறிஞன் ஆகிய இவர்களெல்லோரும் சமமே. ஆதலின் நிலையற்ற காயமுள்ளபோதே நிலையான தருமத்தை நாம் நாடவேண்டும். ஏனெனில் அறிவுள்ள நண்பரே இதமான அமிழ்தம் போன்றவராவர். மீற்க,

"இட்டார் பெரியோர், இடாதார் இழிகுலத்தோர்" என்று தருமசாஸ்திரம் முறையிடுவதால், நாம் உயர்வடைய "தீவினைவிட்டீட்டல் பொருள்", "திரைகடலோடியும் திரவியந்தேடு" என்கிற

படி கல்வழியில் பொருளீட்டி யுதவும் உபாயத்தைக் கைப்பற்ற வேண்டும்.

" பொருளிலார்க் கின்ப மில்லை
புண்ணிய மில்லை யென்றும்
மருவிய கீர்த்தி யில்லை
மைந்தரிற் பெருமை யில்லை
கருதிய கரும மில்லை
கதிபெற வழியு மில்லை
பெருநிலந் தனிற் 1.சஞ் சாரப்
பிரேதமாய்த் திரிகு வாரே "

என்றும்,

" அளப்பரும் 2.விஞ்சையே யன்றி மேன்மையும்
உளப்படு தன்மையும் உயர்ந்த சீர்த்தியும்
கொளப்படு 3.கொற்றமும் பிறவுங் கூட்டலால்
4.வளத்தினிற் சிறந்தது மற்றொன் றில்லையே "

என்றும்,

" 5.கைத்துடையான் காற்கீழ் ஒதுங்கும் கடல்ஞாலம்
பித்துடைய வல்ல பிற "

என்றும் பொருளின் ஏற்றத்தை நூல்கள் பலவாறு புகழ்ந்து பேசுகின்றன.

பொரு ளீட்டுவது பெரிதல்ல. அப்பொருள் அநுபவித்தற்கும், பிறர்க்கிட்டுக் காட்டுவதற்கும் பயனுதற்குரிய தென்பதை யறியவேண்டும். தானும் அநுபவியாது, பிறர்க்கும் உதவாது சேமித்த பொருள் அழியும் பொருளாம். கொள்ளுங் குணமே மிகுந்திருக்கும் ஆழமுள்ள கடல் பாதலம் வரையில் கீழ்நோக்கியே செல்லுகின்றது; கொடுக்குந் தன்மைவாய்ந்த மேகமல்லவா வானத்தின்மேற் கிளம்பிக் கர்ச்சனை செய்கிறது.

பேடி பெண்களைத் தொட்டுப் பார்ப்பதுபோல லோபி திரவியத்தைத் தனக்கும் பிறர்க்கும் பயனுகாதபடி சேமித்து வைக்கிறான்.

புருஷருக் குண்டாம் பாக்கியமும், குதிரைகள் குதூகலித்து மேற்கிளம்புவதும், மேக கர்ச்சனையும், பெண்களின் மனமும், மழை பெய்யாமையும், மழை அதிகமாய்ப் பெய்தலும் மகாதேவனுக்கே தெரியாவெனின் அவற்றை மனிதர் தெரிந்துகொள்ள வல்லரோ ?

1. நடைப்பிணம். 2. வித்தை (கல்வி). 3. வெற்றி. 4. பொருள். 5. தனவந்தன்.



மாறாத சிநேகத் தன்மையின் அளவு ஆபத்தில்தான் அறியக்கூடும். காற்றடியாவிடின் பஞ்சுப்பொதியும் பருவதமும் வேறுபாடின்றியன்றோ விளங்கும் ? ஆதலால், மித்திரர், சுற்றத்தார், சொந்தமானவராகிய இவர்களின் பேரறிவும், பெருஞ்செல்வமும் இத்தன்மையனவென்று அறிந்துகொள்ள ஆபத்தே உரை கல்லாயிருக்கின்றது.

உலக அமைப்பில் அடங்கியுள்ள மேற் கூறியவைபோன்ற விநோதங்களை நாம் அறிந்து, ஆத்மார்த்தமான உறுதியைக் கைப்பற்றிவாழ நமக்குப் பல வுண்மை நூல்களை வெளியிட்டருளிய பெரியோர்களின் மகிமையே மகிமை.

அகஸ்தியர்க்கு ஜன்மஸ்தானம் மட்குடம், பரிஜனம் விலங்குகள், ஆடை மரவுரி, வாசஸ்தலம் வனம், ஆகாரம் கந்தமூலம். இப்படியிருந்தும் அவர், கரையற்ற கருங்கடலைத் தமது உள்ளங்கையிலடக்கி யுட்கொண்டார். இதை நோக்கும்போது பெரியோர்களுக்குக் காரியசித்தி மகிமையாலன்றிக் கருவியாலன்றென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகின்றதல்லவா ?

ஸ்ரீராமபிரான் ஜெயிக்கவேண்டியதோ இலங்கை, தாண்டவேண்டியதோ கடல், எதிரியோ இராவணன், யுத்தகளத்தில் சகாயமோ வானரம், தானே பாதசாரியான மனிதன். அவ்வண்ணம் இருந்தும் இராக்ஷஸகுலத்தை வேரறுத்தார். இதுவும் பெரியோரின் மகிமையை வெளிப்படுத்துகின்றது.

இப்படி உலக அமைப்பானது பெரியோர்களின் மகிமையால் விநோதக் காட்சியைக்கொண்டிருக்கின்றது. இவற்றையெல்லாம் நாம் உய்த்துணர்ந்து, அருள், அடக்கம், பரோபகாரம், ஜீவகாருண்யம் முதலிய உத்தம குணங்களைப்பெற்று, எல்லோரிடத்தும் இதமாக நடந்து, இறைவன் திருவருளுக்குப் பாத்திரராய் வாழ ஜெகதீசன் கருணை பாலிப்பானாக.

ஓம் தத் ஸத்.

## செல்வச் செருக்கு

திரண்ட செல்வமானது ஒருவனுக்கு வந்து சேருமாயின் தெய்வமொன் றுண்டென்பதை மறக்குந் தன்மையும், இன்னவிடத்திலே யின்னவிதமாகப் பேசவேண்டு மென்பதை மறந்து செல்வச் செருக்கினால் தன்னை யுயர்த்திப் பேசுவதும், ஏழைகளாகிய தனது சுற்றத்தவர்களை

அன்னியர்களெனக் கூறுவதும், நன்மையான விஷயத்திலேனுந் தீமையான விஷயத்திலேனுந் தானே வெற்றி யடையவேண்டுமென்று நினைப்பதும் அத்தனவர்தனுக்கு இயல்பாக விருக்கின்றன. ஆகாயத்திலே பறந்து திரியும் பறவைகள் தங்களுக்காக வீடுகளைக் கட்டுகின்றன. தங்கள் குஞ்சுகளுக்காக இரைதேடிக் கொண்டுவந்து அன்புடன் அவற்றைப் போஷிக்கின்றன. தூக்கணங் குருவியின் கூட்டைப்பாருங்கள். எவ்வள வலங்காரமாகவும் நூதனமாகவு மிருக்கின்றது. அத்தன்மையான கூட்டை நாம் ஒருபோதுஞ் செய்ய முடியாது. ஆனால் ஏராளமான திரவியஞ் செலவு செய்து மாட மாளிகைகளையுங் கூடகோபுரங்களையு மமைக்கின்றோம். பூர்வீக சரித்திரங்களைப் பாருங்கள். ஒருகாலத்தில் சகல வளப்பங்களும் பொருந்தியுள்ள பட்டினம் மற்றொருகாலத்திலே காடாக விருப்பதை யறிகின்றோம். சுடுகாடு ஒருகாலத்திலே பட்டினமாக மாறுவதையுங் காண்கின்றோம்.

மேற்கூறிய பிரகாரம் ஆகாயத்துப் பறவைகள் தங்களுக்காகக் கூடு கட்டித் தங்கள் குஞ்சுகளைக் காப்பாற்றுவது போலவே நாமும் மாட மாளிகைகளைக் கட்டி நமது பிள்ளைகளைக் காப்பாற்றுகிறோம். பட்சிகளினுடைய செய்கைகளும் நம்முடைய செய்கைகளும் வேறுபட்டிருத்தலின் நாம் மனிதரென் றிருப்பதின் பிரயோசனந்தானென்ன? ஆராய்ந்து பார்க்கின் மனிதர்களினும் பட்சிகள் மேலானவையென்று சொல்லவேண்டியதாக விருக்கிறது. ஏனெனில் காகந் தனக் ககப்பட்ட இரையை யுண்ணும்பொழுது தன்னுடைய சுற்ற மித்திரர்களைக் கூவி யழைத் துண்ணுகின்றது. நாமோ, சுற்றத்தவர்கள் பசியால் வருந்தக் கண்டும் இரக்க மற்பமுமில்லாது அவர்களுக்குக் கொடாதவண்ணம் புசித்து ஏப்பமிடுகின்றோம். குபேர சம்பத்துடையவர்களுடைய மாளிகைகளை யடைந்து சில தர்மவிஷயங்களைப்பற்றி யெடுத்துக் கூறினால், அல்லது தர்ம விஷயத்துக்காகப் பொருளுதவி செய்யவேண்டுமென்று கேட்டால் அவர்கள் தங்களிடத்தி லேதோ விசேஷ கௌரவ மிருக்கிறதென்றும், தம்மைப் பணவுதவி செய்யும்படி கேட்டவர்கள் மிகவுங் குறைந்தவர்களென்றும் நினைத்து விடுகின்றார்கள்.

“வெள்ளிவிட்ட காலுக்கு வெறுங்கா லடிமை” என்பதே யிவர்களுடைய எண்ணம். முன்னும் பின்னு மில்லாது இடைநடுவிற் பொருந்துகின்ற இச் செல்வமானது சிவன் தந்ததென்று கொடுக்க வழியறியாது மனமில்லாதவரை நாமென் சொல்வோம். தங்களிடத்திலுள்ள திரவியமும் மாளிகையும் பெண்டிர் பிள்ளைகளும், எக்காலமும் தம்மைவிட்டு நீங்குதலில்லையென்று நம்பி விடுகின்றார்கள். அந்தோ! என்ன அறியாமை !!

“பண்டு காமரானவாறும் பாவையர் வாயமுதம், உண்டவாறும் வாழ்ந்தவாறும் ஒக்க வுரைத் திருமித், தண்டு காலாவூன்றி யூன்றித் தள்ளி நடவாமுன்” னும், “முதுகுபற்றிக் கைத்தலத்தால் முன்னொரு கோலூன்றி,



விதிர் விதிர்த்துக் கண்சுழன்று மேற்கிளைகொண்டிருமி, இதுவென்னப்பர் மூத்தவாறென் றிளையவ ரேசா முன்” னும், ஆற்றுப் பெருக்கினிலே யங்கு மிக்குத் தோற்றி மறைகின்ற திடருக்குச் சமானமாகிய செல்வத்தை நிலையென்று மதியாது, தேச முன்னேற்றத்துக்குஞ் சமய முன்னேற்றத்துக்கு மின்றியமையாத கைங்கரியங்களைச் செய்யும் பொருட்டு நாம் முன்வருதல் வேண்டும்.

மங்காத பெரும் பேற்றை யடைந்த மகான்கள் இவ்வுலக வாழ்க்கையையும் செல்வ நிலையாமையையு முணர்ந்து தங்கள் சீவிய காலத்தையுஞ் செல்வத்தையும் பரம கைங்கரியங்களிலே செலவிட்டதையும் தற்போது செலவிட்டு வருவதையும் நாம் யோசித்துப் பார்த்தல் வேண்டும்.

பரதகண்டத்தி லவதரித்த ஆயிரக் கணக்கான தேசாபிமானிகளும், கோடீஸ்வரர்களும், தங்கள் சீவிய காலத்தையும் திரண்ட செல்வத்தையும் எவ்விதமாகச் செலவு செய்கின்றார்க ளென்பதைப் பாருங்கள். நவரத்தின மயமான மாடகூடங்களையும் நிலாமணி முற்றங்களையும் அம்சதூளிகா மஞ்சங்களையும் துறந்து, தேவியர்களையுந் திரவியங்களையும் புத்திரர்களையும், நூற்றுக்கணக்கான ஏவலாளர் பணி கேட்ப வீற்றிருக்கும் உன்னதநிலைகளையும் மறந்து தேச முன்னேற்றத்தின்பொருட்டுக் கைதிகளாகிச் சிறைச்சாலைகளிலே படுக்கப் பாயுமின்றி யெதற்காகப் பிரயாசைப்படுகின்றார்கள்.

இவர்களுக்குள்ள குறையென்ன? தேச முன்னேற்றத்துக்காகவே தங்கள் திரவியங்களையெல்லாம் செலவு செய்கின்றார்கள்.

செல்வர்களா யுள்ளவர்கள், தங்கள் செல்வம் நிலையானதென்றும், தமது பெண்டிர் பிள்ளைகள் என்று மிறவாதிருப்பர் என்றும், ஒருவேளை யிறந்தாலும் தம்முடன் பணத்தைக் கட்டிக்கொண்டு போகலாமென்றும் நினைத்தல் தவறு. “ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்” என்ற முதுமொழி சத்தியமன்றோ? கரணங் கலங்க மரணம் வருமே; காலதூதவர் பாசத்தினுற் கட்டிச் செல்வாரே. தருமஞ் செய்யாத பாவிகளென்று கிங்கரர்க ளாக்கினை செய்வார்களே. அப்பொழு தக்கிங்கரர்களை நோக்கி “என்று மிறவோ மென்றிருந்தோ மிறந்துபடுவ தறிந்தோ, மின்று படைத்த பொருளையெல்லா மருள்வோம், பெரியோர்க்” கென்று சொல்லக் கூடுமோ? அல்லது இப்படி மரணம் திடீரென வருமென்று நினைக்கவில்லையே! இன்னு மொருதரம் “சென்று வரவாங் கெம்மை யின்னுஞ் செலுத்திற் புதைத்த திரவியத்தை, யொன்று மொழியா தறம்புரிந்திங் கோடிவருவோம்” மென்றுதான் சொல்ல முடியுமா? செல்வப் பிரபுக்காள்! உங்கள் திரண்ட செல்வத்துக்கேற்ற பலனை யடையவேண்டுமாயின், உங்கள் மங்காப் பெரும் புகழானது மலைமேல் தீபம்போல் என்றென்றைக்கும் பிரகாசிக்க வேண்டுமாயின், தேச முன்னேற்றத்துக்குஞ் சமய முன்னேற்றத்துக்கு மின்றியமையாத முயற்சிகளிற் றலையிடுங்கள். இதுவே மண்ணுலகில் மானிட ஜென்மமெடுத்துப் பிறந்தோர் செய்யும் முக்கிய கடமையாகும்.

இ. இரத்தினம்.

குறிப்பு:— "கைப்பொருள் பெற்ற ஞான்றே
கடவுளா லயத்துக் கீந்தும்
மெய்ப்படு புராண நூல்கள்
விதிமுறை கேட்டு வந்தும்
வைப்பென விரப்போர்க் கீந்தும்
வருபவ ருணரேற் கூற்றம்
மொய்ப்படு தண்டம் நீங்கி
முன்னவ னின்பத் தாழ்வார்"

என்பதை நாம் அனைவரும் சிந்திக்கவேண்டும். சிந்தித்து நம்மா லியன்ற பரோபகாரங்களைச் செய்து வரவேண்டும். அவ்வாறு செய்துவரின்,

"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றுச் செல்வம்
நயனுடை யான்கட் படின்"

அதாவது உலகநடையினை அறிந்து ஒழுக வல்லவனிடம் செல்வமுண்டாயின் அது பயன்படு மரம் ஊர் நடுவே பழுத்ததை யொக்கும் என்னும் வேத வசனத்திற்கு நாம் இலக்காகி, இம்மை மறுமைப் பயன்களை எளிதி லடையலாம். ப-ர்.

---

## சங்கிராந்தி—பொங்கலோ பொங்கல்.

சங்கிராந்தியின் விருத்தாந்தம் நம்மவர் பலரும் அறிந்ததொன்றே. சிலர்க்கு அவ்விஷயம் தெரியாதிருக்கலாம். இந்தத் தைமாதத்தில் அப்பண்டிகை வருதலால் அதைப்பற்றிச் சிறிது இங்குப் பேச நேர்ந்தது.

சங்கிராந்தி யென்பது பனிரண்டு இராசிகளில் ஒன்றான தனுராசியில் சூரியன் சஞ்சரிக்குங் காலமாம். இக்காலமே தேவர்களுக்கு விடியற்காலம் என்று நூல்க ளறிவிக்கின்றன. மகா சங்கிராமே சக்தி என்னும் சக்தி, தக்ஷிணாயனமான ஆறுமாதகாலத்தில், மனிதரை மூதேவி வடிவு கொண்டும், பசுக்களைப் புலி வடிவுகொண்டும் வருத்தி வருவதாக ஆன்றோர் கூறுகின்றனர். அவ்வாறு வருத்தும் துன்பம் ஈசுவராநுக்கிரகத்தால் நீங்கினமைபற்றித் தைமாத முதல் தேதியன்று ஜனங்கள் அக்காலத்தில் விளைந்த புதுப் பொருள்களால் சூரியனை ஆராதித்தனர். அந்தச் சக்தி பசுக்களைப் புலியுருவாய் அதஞ் செய்திருந்தபடியால், அப்பசுக்களைக்கொண்டு புலியுருக்கொண்ட சக்தியை ஓட்டிய நாளே அந்நாளாம். இதை மாட்டுப் பொங்கல் என்று வழங்குவர். இவ்வாறு சிவாகமம் கூறுகின்றது.

இன்னமேயன்றி இந்திரன் மழை வருஷிப்பவன் ஆதலால் அவன் செய்த நன்மையின் பொருட்டுத் தைமாத முதலில் அறுத்த முதற் பயிரைப் பொங்கலிட்டு மழைக் கடவுளாகிய இந்திரனுக்கு ஆராதித்து வந்தனர். கிருஷ்ணாவதாரத்தில் பகவான், ஜனங்கள் இந்திரனுக்குச் செய்து



வந்த அந்த ஆராதனையை, மழை வளத்திற்கு ஆதாரமான மலைக்குச் செய்துவரக் கட்டளையிட்டனர். ஜனங்கள் அக்கட்டளைப்படியே கோவர்த்தனகிரியை ஆராதித்துவந்தனர்.

இச் செய்கையைக் கண்ணுற்ற இந்திரன் ஜனங்கள்மீது கோபங்கொண்டு அவர்களை அடியோடு அழிக்கவேண்டிப் பெருமழை பெய்வித்தனன். அதனால் குடிகள் நிலைகுலைந்து, மாடு கன்றுகள் சிதறக் கஷ்டமடைந்தனர். அப்போது கிருஷ்ணமூர்த்தி குடிகளை அஞ்சாதிருக்க வைத்து, கோவர்த்தனகிரியை மேலெடுத்துத் தாங்கி, அவர்களையும், மாடு கன்றுகள் முதலிய பொருள்களையும் பாதுகாத்தனர். ஏழுநாள் பரியந்தம் இக்காட்சியைக்கண்டு நாணமடைந்த இந்திரன் தன் பிழையைப் பொறுத்தருளுமாறு கிருஷ்ணமூர்த்தியைப் பிரார்த்திக்க அவர், சங்கிராந்திக்கு முன்னாள் குடிகளைக்கொண்டு அவ்விந்திரன் பெயரால் பண்டிகையொன்று செய்வித்தனர். அது போகி பண்டிகை யாயிற்றென்றும் (போகி-இந்திரன்), மறுநாள் பெரும் பொங்கல் என்னும் சங்கிராந்தி பண்டிகை யாயிற்றென்றும், அதற்கடுத்தநாள், ஜனங்கள், மழையால் வருந்திய மாடு கன்றுகளைத் தளை யவிழ்த்துவிட்டுக் களித்தமையால், அது மாட்டுப் பொங்கலாயிற்றென்றும், அதற்கடுத்தநாள் ஒருவரையொருவர் சென்று மழையால் நேர்ந்த சுகாசுகங்களை விசாரித்ததால் அது காணு பொங்கல் ஆயிற்றென்றும் சொல்லுவர். அப்போது மழையால் இடிந்த வீடுகளைப் பழுதுபார்த்துச் சுத்தப்படுத்தினராதலால், அவ்வழக்கப்படி இப்போதும் வீடுவாசல்களைச் சுத்தப்படுத்துகிறார்கள். அந்தக்காலத்தில் சிலர் வீடுகளை மலை மண்ணால் மெழுகிச் சுத்தஞ் செய்தனர். அதுபோலவே இப்போது செம்மண்ணிடுகின்றனர். அம்மலையடிவாரத்தில் குடிபுகுந்தோர் சிலர் சமைக்க அடுப்புத்தோண்டி, வறட்டிமூட்டி பனையோலையிலும் தீ மூட்டினராதலால் இப்போதும் அவ்வகை செய்து வருகின்றனர். இவ்வண்ணம் வேறு நூல்கள் கூறுகின்றன.

பொதுவாக இதன் கருத்தாவது :—ஒரு வருஷத்தில் உத்தராயணமென்றும், தக்ஷிணாயனமென்றும் இரண்டு அயனமுண்டல்லவா? அவற்றுள் உத்தராயணமாவது சூரியன் வடபாதிக் கோளத்தைச் சார்ந்த மகரமுதல் மிதுனமீறாகிய ஆறுராசிகளில் சஞ்சரிக்குங்காலம்; தக்ஷிணாயனமாவது தென் பாதிக் கோளத்தைச்சார்ந்த கர்க்கடக முதல் தனுசீறாகிய ஆறுராசிகளில் சஞ்சரிக்குங்காலம். அயனம்=சஞ்சாரம். உத்தரம்=வடக்கு; தக்ஷிணம்=தெற்கு. நம்முடைய ஒருவருஷம் தேவதைகளுக்கு ஒருநாள்: ஆகையால், உத்தராயணம் பகலும், தக்ஷிணாயனம் இரவுமாகும். இராக்காலத்தின் கடைசிமுகூர்த்தம் பகற்காலத்துக்கு விடியற்காலமானது போல், சூரியன் தனுசில் சஞ்சரிக்குங்காலமாகிய மார்கழிமாதம் உத்தராயணமாகிய பகலுக்கு விடியற்காலமாகின்றது: ஆனதனால், இத்தமாத முழுதும் விடியற்காலத்தில் நீராடிக் கடவுளைப் பூசித்துத் தோத்திரஞ்

செய்வது விசேஷமென்று சாஸ்திரம் சொல்லியபடி, இத்தேசத்தில் தேவாலயங்களிலும், கிருகங்களிலும், பூஜைகளும், உற்சவங்களும் நடந்து வரும். இந்தமாத முழுதும் விரதமிருந்தவர்களுக்கு இஷ்டம் நிறைவேறி யிருப்பதாகப் புராணங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றது. அப்படிப்பட்ட விசேஷ மாதத்தின் கடைசியாய், இஷ்டசித்திபெற்ற நாளாயிருப்பதனால், இந்நாளுக்குப் போகி என்று பெயர் உண்டாயிற்று. போகத்திற்கு இடமான காலம் போகி. போக மென்பது சுகத்தை அனுபவித்தல். அன்றைக்கு விடியற்காலத்தில் பெருந்தீக் கொளுத்திக் குளிர்காய்வதும், தப்பட்டைகளைக் கொட்டுவதும் இழிந்தவர்களுடைய வழக்கம். இது ஆதாரமற்றது. இந்நாளில் ஆலயங்களில் சிறப்பான திருவிழா நடக்கும். மாளிகைகளிலும் பற்பல பணியார பலகார வகைகளோடு இஷ்டரும் தாமும் விருந்துகொண்டாடுவார்கள்.

பொங்கற் பண்டிகை என்பது உத்தராயணத்தின் முதனாள். அன்றைக்குத்தான் சூரியன் வடபுறம் திரும்புகிறான். இத்தேசத்தில் இதற்கு முந்திய காலமெல்லாம் விளைவுகாலமா யிருந்தது; இக்காலமே தானியங்களை அறுத்துச் சேர்க்கிற காலமாயிருப்பதனால் சூரியன் முகாந்தரமாய் விளைவுக்கு வேண்டிய மழை முதலானவற்றைப் பெய்வித்து க்ஷேமத்தை உண்டாக்கின கடவுளுக்கு உபசாரமாய் முதலில் அறுத்த தானியத்தின் அரிசியைப் பாலும் வெல்லமும் சேர்த்துச் சமைத்துப் பழமுதலிய சிறப்போடு சூரியனுக்கு அல்லது சூரியமண்டலத்தில் எழுந்தருளியிருக்கிற கடவுளுக்குப் படைத்துப் பந்துக்கள் முதலானாரோடு பெருநாள் கொண்டாடுவார்கள். ஞானிகளோ, இந்நாளை நினைத்து பரமாத்துமாவைத் தியானிப்பார்கள். இதற்கு முன்பே வீடுகளைப் பழுதுபார்த்துச் செப்பஞ் செய்து வைப்பார்கள். தைமாதம் இரண்டாந்தேதியாகிய இப்பொங்கலின் மறுநாள் உழவு முதலான சகலத்துக்கும் இந்நாட்டாருக்கு மாடுகளே விசேஷ உதவியானதைப்பற்றி, அந்த மாடுகள் விருத்தியடையவேண்டுமென்னும் கோரிக்கையினால் பகலின்மேல் பொங்கலிட்டுக் கடவுளுக்குப் படைத்துத் துதித்து மாடுகளை அலங்கரித்துக் கீத வாத்தியங்களோடு ஊர்கோலமாக வருவார்கள். பொங்கல் இடுவதினால் இந்நாட்களுக்குப் பொங்கல் என்று பெயர் வந்தது. பயிர் வளப்பத்தின் நன்றிக்காகப் பொங்கலிடு முதனாளைப் பெரும் பொங்கலென்றும், மாடுகளின் வளத்துக்காகப் பொங்கலிடு மறுநாளை மாட்டுப் பொங்கலென்றும் சொல்வார்கள். செல்வமுள்ளவர்கள் மருமகன் முதலானார்க்கும் சிநேகிதர்களுக்கும் வேலைக்காரர்களுக்கும் கோடிவஸ்திரங்கள் கொடுப்பார்கள். இந்த இரண்டுநாளிரவிலும் அடுத்த நாட்களிலும் ஒருவரை யொருவர் கண்டு, "பால் பொங்கிற்று" என்று க்ஷேமம் விசாரித்து, தாம்பூலமுதலிய உபசாரங்களைப் பெறுவார்கள். இவ்வழக்கம் பெரும்பாலும் பிராமணர்களல்லாதாரிடத்திலேயே உண்டு. இது ஒரு முக்கியமான். (ஸ்ரீ லோகநாதன்) ப-ர்.

# மொழி.

ஒருவர், தம் கருத்தினை மற்றொருவர்க்கு உணர்த்துவதற்குக் கருவியாவது மொழியாம். அம்மொழிதான் தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு எனப் பல வகையதாம். இப் பலவற்றுள்ளும் 'தமிழ்' குணகடல், குமரி, குடகம், வேங்கடமென்னும் நான்கு எல்லையினிடையே பழமையாகி வழங்கி வருவதொன்றாம். இத்தன்மையதாய இம்மொழி யென்றுந் தன்னிலையில் தளராமற் றழைத்தோங்க அது வழங்கும் எல்லைக்கண் வாழ்ந்திருந்தவர்கள் தத்தம் எல்லையில் அறிவு கூர்ந்தியற்றிய நூல்களோ சொற்பொருளின்பங்களில் எல்லையில்லாதவைகளாம். அவற்றை யவர்கள் தம் பின்னோர்க்கு எய்ப்பினில் வைப்பாக வைத்து இசைகொண்டனர். அன்றியும், அவர்கள் தமது நிலத்து மக்கள் சான்றோராவதற்குத்தக்கவை யிவை யெனத் தம் நூலின்கண் உய்த்துணர்வார் உணரக்காட்டியதுடன் மொழி வளர்ச்சிக்குக் காரணமாவனவற்றுள் பிறமொழிக் கருத்துக்களையும் சொற்களையும் தாம்கண்ட இலக்கண இலக்கியங்களினிடை விளக்கவைத்து அம்மொழிகள் நிலைபெற வாழ்ந்து வந்தனர்.

"இலக்கியங்கண்டதற் கிலக்கணமியம்பல்" (நன். பத. 14) இலக்கணமாதலின் "என்றுமுள தென்தமிழியம்பி யிசைகொண்ட" (கம்ப-அகத்-47) வராகிய அகத்தியனார் முதலிய பலரும் தத்தம் நூற்கண் நுண்ணறிவினவியற்றிய பன்னூற்களையு முய்த்துணர்ந்து விதி விலக்குகள் விதித்தனர். இக்காலத்தில் எந்நூலினும் முன்னூலாகக்கொள்ளும் பெருமை வாய்ந்த ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியத்துள்,

> "இயற்சொற் றிரிசொற் றிசைச் சொல் வட சொலென்
> றனைத்தே செய்யு ளீட்டச் சொல்லே" எனவும்,
> (தொல். சொல்-எச். 1)

> "வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
> யெழுத்தொடு புணர்ந்த சொல்லா குமமே"
> (தொல். சொல்-எச். 5)

எனவும்,

> "சிதைந்தனவரினும் இயைந்தன வரையார்"
> (தொல். சொல்-எச். 6.)

எனவும் சூத்திரங்கள் தோன்றலின், தொல்காப்பியம் தோன்றிய காலத்திற்கு முனே தோன்றிய விலக்கியங்கள் இச் சூத்திரங்கள் தோன்றியமைக் கிடந்தனவாதல் வேண்டும். பயிலப் பயில வின்பஞ் சுரப்பனவாய், அறியுந்தோறும் அறியுந்தோறும் அறியாமையே காண விருப்பனவாய், ஆன்ற அறிவினர் அளித்த பன்னூல்களுக்கும் உரை யளித்த ஆசிரியர்கள் ஆங்காங்குத் தாம் கண்ட சொற்கள் இம்மொழியின, இவ்வாறுயின எனக் கூறி ஆதாரமான விதிகளும் விளக்கக் கூறினர். இந்நெறியின் முன்னோரும், அம்

முன்னோர்தம் வழியே நூற்கள் கண்ட பின்னோரும் பிறமொழிக் கருத்துக்களையும் சொற்களையும் ஆட்சிசெய்து வந்தவராதல் குன்றின் மீதிட்ட விளக்காம்.

ஒரு மொழிக்கண் பிறிதொரு மொழி கலத்தற்குக் காரணம் பலவாம். ஒரு நிலத்தவர் பிறிதொரு நிலத்தவருடன் கலத்தலின்றித் தனித்தவராய் வாழ்வாராயின் அப் பிற நிலத்தவர் மொழியும் பழக்க வழக்கங்களும் தனித்தவரைச் சாரா. வர்த்தகத்தாலோ, வேற்றரசரின் ஆட்சி காரணமாகவோ, வேறு காரணங்களாலோ ஒரு நிலத்தில் வாழ்பவர் பிறிதொரு நிலத்தில் வாழ்பவருடன் கலத்தல் கூடின் அவர்தம் மொழிகளும் ஒன்றோடொன்று கலவாதிருத்தல் கூடுமோ? மேலும் ஒரு தேசத்துப் பொருள் மற்றொரு தேசத்துக்குச் செல்லின் சென்றவிடத்தும் தன்தேசத்தில் தனக்கு வாய்த்த பெயரை யல்லவா அப்பொருள் வகிப்பதாகின்றது. இத் தொடக்கத்துப் பலகாரணங்களால் மொழிகள் ஒன்றோடொன்று கலக்கப் பெறுதல் இயல்பே யென்பது தேற்றம். நிற்க:—

முன், தென்மொழியினர், வடமொழியினருடன் தொடர் புடையராய் வாழ்ந்ததனானே வடமொழிச் சொற்கள் பல தென் மொழிக்கண் விரவப் பெற்றன. வடமொழியில் பல துறையினையும் பற்றிய நூல்கள் பல பல்லாற்றானும் பரந்தனவாய்க் குறைவேதுமின்றி நிரம்பி யிருந்தன. அதனாலே, அலங்காரம் அறிவிப்பனவும், தருக்கந் தெரிவிப்பனவும், சாத்திரஞ் சாற்றுவனவுமாகிய நூல்கள் பலவும் வடமொழியி னின்றுந் தென்மொழிக்கு மொழிபெயர்க்கப் பெற்றன. மொழி பெயர்த்தார் பலரும் வடமொழிக்கண்ணும் தென்மொழிக்கண்ணும் புலமை மிக்கிலராயின் வடமொழி நூற் கருத்துக்களைச் செவ்விதின் உணர்ந்து கண்டோர் புகழத் தற்சமத்தானும் தற்பவத்தானும் மரூஉவின் பாத்தியானும் சொற்களைப்பிரயோகஞ்செய்யும் வன்மையுடையவராவரோ? 'மேருமந்தரர்புராணம்', 'சூளாமணி' யொத்த நூல்களைப் பயின்றோருக்கு அந்நூலாசிரியர்கள் வடமொழிச் சொற்களை ஆண்டிருக்குஞ் சதுரப்பாடு சாமானியமானதென்று கூறுதல் ஆகுமோ? பயின்றோர், அவர்தம் அறிவின் நுண்மையினையும் ஆட்சிச் சொற்களின்பெருமையினையும் கண்டு கண்டு களிப்பென்னுங் கடலில் மூழ்குதலின்றி வேறு நினைப்பும் கொள்ளுதற் பான்மைய ராவரோ? பண்டைப் புலவருள்பலரும் இருமொழிக்கண்ணும் வல்லுநராயிருந்தனராதல் தொல்காப்பியத்திற்குப் பாயிரம் பகர்ந்த 'பனம்பாரனார்', தொல்காப்பியனாரை 'ஐந்திர நிறைந்த தொல்காப்பியன்' எனலானும், அத்தொல்காப்பியத்தின் சொற்பகுதிக்கே புரை புதவினாரை 'வடநூற்கடலை நிலைகண்டுணர்ந்த சேனாவரையர்' எனலானும் பகவத் குணானுபவத்திலாழ்ந்த ஆழ்வார்கள் அருளிய திவ்யபிரபந்தத்திற்கு வியாக்கியானமிட்டருளிய நல்லறிஞர்கள் மணிப் பிரவாள நடை கண்டிருத்தலானும் தெளிவாம். ஆழ்வார்கள் அருளிச் செயல்களுக்கு உரை விரித்தாருள் ஒருவராய 'பெரிய வாச்சான்



பிள்ளை', தம் உரைக்கிடையில் 'மன்னருஞ் சிறப்பிற் பவணந்தியெனும் நாமத்திருந்தவத்தோன்' (நன். பாயிரம்) அருளிற் றந்த நன்னூற் சூத்திரங்கள் பலவற்றை யாட்சிக்குக் கொண்டமை குறிப்பின், அவர்தாம் வைணவப் பற்றுடையாரேனும் அது புறமதத்தினர் புகன்றதுவே யெனினும் இலக்கணமே கூறுவதாய், எல்லோருக்கும் ஒப்பமுடிந்த தொன்றாயவதனைப் பொன்னெனப் போற்றியருளிய நடுநிலை விளங்குவதன்றோ?

ஆக இதுவரை கூறியதனான் மொழிகள் ஒன்றுடனொன்று விரவப் பெறு மென்பதும், முன்னோர் பலர் வடமொழி தென்மொழிகளில் பயிற்சி பெற்றோர் என்பதும், அன்னோர் வடமொழிக்கண் உள்ள பலதுறைப்பட்ட பன்னூல்களைத் தமிழ்ப்படுத்தினார் என்பதும், அவர் ஒருமொழிக்கண் வைத்த பற்றினராய்ப் பிறிது ஒருமொழியினை வெறுத்தனரல்லர் என்பதும் தெளிவாம். இனித் தற்காலத் தமிழர் கொள்கை தெளிவாம்.

தற்காலத்துத் தமிழ்ப் பயிலுநரிற் சிலர், முன்னவர் கொண்ட கொள்கைக்கு மாறுவாராவர். அவர் தமிழ்மொழி பிறமொழியினுதவியின்றித் தானே தனித்து நிற்கற் பாலதென்பர்; தனித் தமிழானே பேசவும், எழுதவும் முயற்சிப்பர். இம்முயற்சியாற் சொற்களை எளிதிற் பிரயோகஞ் செய்தற்கு முடியாமையும், ஒருவாற்றான் முடிவு பெறினும் சகடம் சமனிலா நெறியிற் செல்லுதல் ஒக்கும் நடையுமே ஏற்படும் பலருக்கும். எனினும் தமிழானே எதுவும் ஆம் என்னும் கொள்கையினர் முயற்சி அவர்களுக்கு எவ்வளவிற்குப் பயனளிக்கும் என்பதனை இது பொழுது சொல்லுதற்கில்லை. வடமொழிக்கலப்பே யிருத்தலாகாதென்னுங் கொள்கையோடு பல்லாண்டுகளாக நின்று விரவிவரும் வடமொழிச் சொற்களைத் தள்ளி, தமிழ்ச் சொற்களையே வழக்கிற் கொணர வேட்குமவர் பன்னூல்களினுங் காணும் பிரயோகங்களையும் தள்ளுவரோ? கொள்ளுவரோ? அறியேம். தள்ளுவராயின், பெருகிய அளவில் வடமொழிச் சொற்களைத் தற்சமதற்பவமரூஉவின் வகைகளான் பிரயோகஞ் செய்யப் பெற்று நிலவும் 'சூளாமணி', 'மேருமந்தரர் புராணம்' போன்றவும், 'தண்டியலங்காரம், சந்திராலோகம்' போன்ற அலங்கார நூல்களும்,

"பொற்பமர் தெய்வ மொழிப்பாகு பாடு
பொது வெழுத்தாய்ப்
பற்பல வாகித் திரிவதுஞ் சாற்றினர்
பண்டு ணர்ந்தோர்
முற்பகர் நூலுட் சிறுபான்மை வேர்க்கு
மொழி பெயர்த்தாம்
தற்பவந் தற்சம மேபெரும் பான்மையுஞ்
சாற்றினமே"

எனக்கூறிய சுப்பிரமணிய தீக்ஷித ரியற்றிய பிரயோக விவேகமும்,

ஸ்ரீ சுவாமிநாததேசிகர்,

"வடமொழி யிலக்கணஞ் சிலவுகுத் ததிர்து
தொல்காப் பியத்தினுர் தொல்காப் பியத்தினும்
அருகிக் கிடந்ததைப் பெருக வுரைத்தனன்"

எனக்கூறி வழங்கியருளிய 'இலக்கணக்கொத்தும்' வழக்காறற் றொழிதல் வேண்டுமென்ப தறியக்கிடக்கின்றது. அவர் இங்குக் காட்டிய சில நூல்களையும் பிற நூல்களையும் இறந்துபடாமற் காத்தல் வேண்டு மென்ற கொள்கையினைக்கொள்வாராயின் தமிழ் தனித்தமிழே யாகுதல்வேண்டும் என்ற கொள்கை தானே விலகவேண்டியதாகின்றது. இந்நிலையில் கொள்வதூஉம் தவிர்வதூஉம் யாதென்பது நடுநிலை யுடையார்க்கே புலனும்.

மேல், தமிழ் தனித்தமிழேயாதல் வேண்டுமென்பார், பிற தேயத்தார் தத்தம் மொழியினை வளர்க்கும் வகையினை ஒரு நொடிப் பொழுதேனும் நோக்குவாராயின் தம் கருத்தினை மாற்றுவராவர் என்பது ஒருதலை. இந்துதேசமெங்கும் இராஜபாஷையாய் வாழ்ந்துவரும் ஆங்கிலமொழி தனி மொழியாகுமோ? கிரீக், லத்தின் முதலிய பாஷைகளின் கலப்பே கொண்டதாய்ப் பரவிய பாஷையே யன்றோ? அவ்வாறாகவும் ஆங்கிலம் பேசுநர் தம்மொழியினைத் தனிமொழியாக்கக் கருதுகின்றிலரே? அவர், தம்மொழி மேன்மேலும் பெருகப் பலதேச மொழிகளையும் அந்த அந்த நிலத்து நூல்களையும் ஆய்ந்து 'தம் பாஷையைப் பெருக்கிக் கொள்கின்ற பெருமையை யென்னென்பது! தமிழைத் தனித்தமிழாக்க முயலுநர் அன்னார்தம் சிறந்த இக் குணத்தினைக் கொள்ளாமே அவர்தம் நடையுடை பாவனைகளை மட்டுங் கொள்கின்ற கொள்கைக்குக் காரணம் ஈதெனத் துணிதற்கில்லை.

ஸ்ரீ சுவாமிநாத தேசிகர் தாமியற்றிய 'இலக்கணக் கொத்' தில்

"தொல்காப் பியந்திரு வள்ளுவ ராதிநூல்
வடமொழி நியாயம் வந்தன சிலவே
தமிழி னியாயர் தந்தன பலவால்"

*  *  *  *  *  *

"வடநூல் வழிகல வாதே தமிழைத்
தனியே நீர்தராத் தன்மை யென்னெனி
னிலக்கண மிலக்கிய மேது நிமித்தஞ்
சாத்திரஞ் சூத்திரந் தந்திர வுத்தி
பகுதி விகுதி பதமே பதார்த்தம்
ஆதி யந்த மகார மகார
முதாரண மாத்திரை புலமை புருவகம்
விகற்பஞ் சந்தி விதியலங் காரங்
கால மிலேசங் காரகம் ஞாபகம்
விசேடணம் விசேடியம் விகாரமதி காரங்
குணங்குணி யாதியாஞ் சொற்கோ ளன்றியும்



பிறிதினியை பின்மை நீக்குதல் பிறிதி
னியைபு நீக்குத லென்னு மிலக்கண
முதலாப் பலவா மொழிபெயர்த் தனவுங்
கொண்டனர் பண்டைய ருண்டோ வின்றே
வன்றியுந் தமிழினாற் களவிலை யவற்று
ளொன்றே யாயினுந் தனித்தமி ழுண்டோ?"

*  *  *  *  *

எனக் கூறிப் போந்ததனை புணர்வார்க்குத் தமிழைத் தனிமொழியாகக் கொள்வதா, முன்னோர் கொண்ட முறையே முறையாகக் கொள்வதா வென்பது உணர்தற் பாலதாம்.

N. திருவேங்கடத்தையங்கார், தமிழ்ப்பண்டிதர்.
C. R. C. High School Purasawalkam.

குறிப்பு:—ஸ்ரீ பெரும்பூதூர்த்தாலுகா, பொண்டூர் போர்ட் ஸ்கூல் ஹெட் மாஸ்டர் V. ஸ்ரீநிவாசன் என்பவர், சென்ற ஐப்பசி மாதம் வெளியான நமது சஞ்சிகையின் 153-ம் பக்கத்தில் 'தமிழினருமை' என மகுடமிட்டு வந்துள்ள வியாசத்தில் ஐயங்கொண்டு "தமிழ் இயற்கை முதன்மொழி யாவது எப்படி? அது முதன்மொழியாயின் தமயந்தியின் சுயம்வரத்திற்கு வந்திருந்த பல தேசத்தரசர்கள் ஒருவரோடொருவர் அம்மொழியால் வார்த்தையாடாமல் எல்லோருக்கும் பொதுமொழியான வடமொழியால் ஏன் பேசவேண்டும்?" என்றும், அதற்காதாரமாக நைடதத்தினின்றும் "............பற்பல தேயவேந்தர் தொகுதலிற் பாடைதேர்வான், அற்புடனவருந் தேவ பாடையி னறைவர்......" என்னுஞ் செய்யுளைக் காட்டியும், மற்றும் அது "சிவன் திருமால் முதலிய தேவர்களும் பேசுதற்குரியதும், வேதங்களுக்கு நெடிது கால முற்பட்டதுமானது என்றால், அரிச்சந்திரன், "உலகுயிர்க்கெல்லாம் பசுபதி ஒருமுதலாயின், அலகில் சீருடையவன் மொழிமறையெனின்", என்று ஏன் கூறவேண்டும்? என்றும், தமது சந்தேகத்தை அறிந்தோர் நீக்கவேண்டும் என்றும் கேட்கிறார். அவர் கொண்ட ஐய நிவர்த்திக்கும் ஒருவாறு ஆதாரமான "மொழி" என்னும் இந்த வியாசத்தைக்கண்டு ஐயம் நீங்குவாராக. ப-ர்.

---

## ஆத்திசூடி உதாரணக் கதைகள்.

(228-ம் பக்கத் தொடர்ச்சி.)

### "தந்தை தாய் பேண்."

"தந்தை தாய்=(நீ உன்) பிதாவையும் மாதாவையும், பேண்=(எப்போதும் பூசித்துக்) காப்பாற்றுவாயாக" என்பது இதன் பொருளாம்.

ஒரு மனிதன், தாய் வயிற்றில் உற்பத்தியானதிலிருந்து உலகத்திற் பிறக்கும் வரையிலும் அவன் அவனுக்கு எவ்வித ஆபத்து முண்டாங்

விடாதபடி மிக்க ஜாக்கிரதையாயிருந்து அவனைப் பாதுகாத்து வருகிறாள். அவன் பிறந்த பின்னரும் தன்னைத்தானே பாதுகாத்துக்கொள்ளும் பருவம் அடையும் வரையிலும் அவள் அவனைத் தன் கண்களைப் பாதுகாப்பதுபோல் காத்து வருகின்றாள். அவனைக் காப்பாற்றும் விஷயத்தில் அவள் பட்டினியாகவு மிருக்கின்றாள்; நித்திரையையும் நீக்கிவிடுகின்றாள்; சரீர சௌக்கியத்தையும் இழந்துவிடுகின்றாள்; வேறு பல கஷ்ட நஷ்டங்களையும் அடைகின்றாள். இன்னும் அவள் அந்தப் பிள்ளையை வளர்ப்பதற்குப் படும்பாடுகள் எண்ணில. அவளைப்போலவே தந்தையும் அப்புத்திரன் கருவிலிருக்கும்போது சௌக்கியத்துடன் வளர்வதற்கான பேருதவிகளை அப்பிள்ளையின் தாய்க்குச் செய்து வருவதோடு, அச்சேய் பிறந்தபின் அவனை வளர்க்கும் விஷயத்திலும், அவனுக்குக் கல்வி போதிப்பதிலும், பொருளீட்டி வைப்பதிலும் அரும்பெரும் பிரயாசை யெடுத்து வருகிறான். இவ்வகைக் காரணங்களால் ஒரு மனிதனுக்குத் தாய் தந்தையர் தெய்வத்திலும் சிறந்தவர்களாகின்றனர். ஆதலின் மனிதர், தங்களுக்கு இளமையில் தாய் தந்தையர் செய்த நன்றியை மறவாமல், தாங்கள் சுயேச்சையாக உலக இயலை நடத்தும் பருவமடைந்தவுடன் அவர்களைப் பாதுகாத்து வரவேண்டும். அத்தகையினரே அறிஞராவர். அவர்க்கு இம்மையிலும் மறுமையிலும் நலமே யுண்டாகும். அங்ஙனம் தாய் தந்தையரைப் பேணாதவர்களோ எவ்விடத்தும் இடர்க்குள்ளாவதோடு பலராலும் நிந்திக்கவும் படுவர்; அவமானத்திற்கும் உள்ளாவர். இக்காலத்தில் சிலர், ஏதோ ஒரு வகை விபரீதப் படிப்பினால் அநாகரீகத்தை நாகரீகமாகவும், அநீதியை நீதியாகவும், கெட்டதை நல்லதாகவுங்கொண்டு இத்தகைய நீதிகளை விடுத்துக் குறுக்கு வழியில் நடப்பதோடு தங்களை அரிதிற் பெற்றுவளர்த்த தாய் தந்தையரையும் அவமதித்து இழிவடைந்து வருகின்றனர். அத்தகையினர்களுடைய கதைகளுள் ஒன்றை நாம் இதனடியில் விளக்குவாம்:—

ஒரு நகரத்தில் மிக வறுமையடைந்த மனைவியும் புருடனும் இல்லறம் நடத்தி வந்தார்கள். அவர்கள் தரித்திர முற்றவர்களாதலின், குடும்பத்தை நடத்த மிகவும் கஷ்டப்பட்டார்கள். அந்நிலையில் அவர்களுக்கு அருமையாக ஒரு புத்திரன் பிறந்தான். அவர்கள் அவனுக்குத் தவமணியென்று பெயரிட்டு அவனை அன்புடன் வளர்த்து வந்தார்கள். அவனை வளர்க்கும் விஷயத்தில் அவர்கள் மிக்க பிரயாசை யெடுத்துக்கொண்டார்கள். கூலி வேலை செய்தும் பணந்தேடி அதனால் அப்பிள்ளையைக் காப்பாற்றிக் கல்வியிலும் அவன் விருத்தி யடையுமாறு செய்தார்கள். தவமணி, தாய் தந்தையரின் உதவியால் உயர்தரக் கல்வியில் தேர்ச்சியடைந்து தாசில் உத்தியோகம் பெற்றான். அதன்மேல் பலரும் அவனுக்குக் கௌரவம் கொடுத்து அவனைத் தவமணிப்பிள்ளை என்று மரியாதையுடன் அழைத்து வந்தார்கள். அவ்வாறு தவமணிப்பிள்ளை உத்தியோகத்திலமர்ந்தபின்பு தம்முடைய அந்தஸ்துக்குத் தகுதியான ஒரு பெண்ணையும் மணந்



கொண்டார். அவருக்கு ஒரு புத்திரனும் பிறந்திருந்தான். தவமணிப்பிள்ளை இவ்வாறு பல சிறப்புக்களையும் தாய் தந்தையரால் அடைந்திருந்தும் அவர்கள் தமக்குச் செய்த நன்றியை மறந்துவிட்டார். உத்தியோக கர்வமானது அவர் தலைமீதேறிக்கொண்டது. அதனால், முன்னே வறுமைத் துன்பத்திற் சிக்கி உடல் மெலிந்து கிழப்பருவமடைந்திருந்த அவருடைய தாய் தந்தையர், அவர்பெற்ற அந்தஸ்திற்குக் குறைந்தவராக அவருக்குக் காணப்பட்டார்கள். அவர், அவர்களை, தம்மைப் பெற்றோரென்று மற்றையரிடம் கூறவும் நாணினார். இங்ஙனம் அவர்கள்மீது அவருக்கு அபிமானங் குறையவே அவர் அவர்களுக்கு நல்லுண வளிப்பதுமில்லை, நல்லாடை கொடுப்பதுமில்லை. அவரும் அவர் மனைவியும் உயர்ந்த உணவுகளை உண்டும், சிறந்த ஆடைகளை உடுத்தியும் இன்பமனுபவித்துக்கொண்டு அந்த விருத்தாப்பியர்களுக்குப் புல்லரிசிக் கஞ்சியைக்காய்ச்சிப் பழைய மண் கின்னியில் ஊற்றிவைத்தும், தாங்கள் கட்டிக்கிழித்துப் பழமைபாராட்டிக் கழித்த ஆடைகளைக் கொடுத்தும், படுப்பதற்குக் கிழிந்த வோர் ஓலைப்பாயை அளித்தும் வந்தார்கள். அவர்கள், "நாம் பிள்ளையைப்பெற்றுக் கஷ்டப்பட்டு வளர்த்தும் நமக்குச் சௌக்கியமுண்டாகத்தக்க விதியில்லை" என்று அத்துன்பங்களை அனுபவித்துக்கொண்டிருந்தார்கள்.

இப்படி யிருக்கும்போது தவமணிப்பிள்ளையின் புத்திரன் ஆறுவயதடைந்து வீட்டில் விளையாடிக்கொண்டு திரிந்தான். அக்காலத்தில் ஒருநாள் தவமணிப்பிள்ளையிடம் ஒரு பெரிய உத்தியோகஸ்தர் வந்து பேசிக்கொண்டிருந்தார். தவமணிப்பிள்ளையின் புத்திரன் அவர் பக்கத்தில் விளையாடிக்கொண்டிருந்தான். அத்தருணத்தில், தவமணிப்பிள்ளையின் தாயும் தந்தையும் வீட்டிற்குள் ஒருபக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்திற்குப் போனார்கள். அவர்களைப் பார்த்தவுடன் தவமணிப்பிள்ளை அவர்கள்மீது வெறுப்படைந்து, "இந்தக் கழுதைகள் ஏன் இங்கே வந்தன" என்று முகத்தைச் சுளித்துக்கொண்டு சொன்னார். அதைக்கேட்டு அங்கே வந்திருந்த உத்தியோகஸ்தர், "இவர்கள் யாவர்?" என்று தவமணிப்பிள்ளையிடம் வினவினார். தவமணிப்பிள்ளை அவர்கள் தம் தாய் தந்தையரென்று அவரிடம் சொன்னால் தமக்குக் கௌரவக் குறைவாகுமென்று நினைத்து, "இவர்கள் நம் கிராமத்திலுள்ள வேலைக்காரனுடைய தாய் தந்தையர்" என்று சொன்னார். அங்கே விளையாடிக்கொண்டிருந்த தவமணிப்பிள்ளையின் புத்திரன், தன் தந்தையும் தாயும், அந்த விருத்தாப்பியர்களுக்குச் செய்துவந்த காரியங்களைப் பலநாளும் கவனித்துவந்ததோடு அப்போது அவர்களைப்பற்றித் தவமணிப்பிள்ளை பேசிய வார்த்தைகளையும் கேட்டு, "பிள்ளையாயிருப்பவன், தாய் தந்தையர்க்குச் செய்யத்தக்கன இவை தாம் போலும்" என்று தீர்மானித்து உடனே தன் தந்தை[illegible] தவமணிப்பிள்ளையிடம், "அப்பா! எனக்கு இரண்டு பழமைய[illegible] இரண்டு கிழிந்த ஓலைப்பாயும், நான் கட்டிக்கழி[illegible]ணிகளைப் பத்திரப்

படுத்திவைக்க ஒரு பெட்டியும், புல்லரிசிமாவும் தேடிக்கொடு" என்றான். தவமணிப்பிள்ளை அதிசயித்து, "இவற்றை எதற்காக நீ கேட்கிறாய்?" என்று அவனை வினவினார். அவன், "அப்பா! நீ இப்போது உன் தாய் தந்தையர்க்கு மண்கிண்ணியில் புல்லரிசிக் கஞ்சி வார்த்துக் கிழிந்த துணிகளும், ஓலைப்பாய்களும் கொடுத்து வருவதுபோல நானும் உனக்கும் என் தாய்க்கும் பிற்காலத்தில் இவற்றைக் கொடுத்துவரவேண்டுமல்லவா; நீ இப்போது உன் தாய் தந்தையரைப் பேசியதுபோல நானும் உன்னையும் என் தாயையும்பற்றி என்னிடம்வரும் உத்தியோகஸ்தரிடம் கூறவேண்டுமல்லவா; அவற்றைச் செய்யும்பொருட்டாகத்தான் இப்பொழுதே இவைகளை நான் சேகரித்து வைத்துக்கொள்ள விரும்புகிறேன்" என்றான்.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் தவமணிப்பிள்ளைக்குப் பெருந் திகிலுண்டாகிவிட்டது. அவர், "நாம், நம் தாய் தந்தையர்க்குச் செய்பவைகளை நமக்குச்செய்ய நம்பிள்ளை காத்துக்கொண்டிருக்கிறான்; நம் செய்கைகள் மிக்க மூடத்தனமானவைகள்" என்று மாறுத்தரம் ஒன்றும் சொல்லமுடியாமல் விழித்துக்கொண்டிருந்தார். அப்போது அங்கே வந்திருந்த அவருடைய சிநேகிதராகிய உத்தியோகஸ்தர் அவரிடமிருந்த மூடச்செய்கைகளை யுணர்ந்துகொண்டு அவரைநோக்கி, "தவமணிப்பிள்ளை! நீர் தாய் தந்தையரை இவ்வாறு அவமதிப்பது முழுமூடச் செய்கை; இத்தகைய உமக்கு உம்முடையபிள்ளை இடர்செய்வான்; அஃதிப்போது உம்முடைய புத்திரன் வார்த்தைகளால் விளங்கிவிட்டதல்லவா? இனிமேலாவது நீர், உம்மைப்பெற்றோரை அன்புடன் ஆதரித்து வருவீராக" என்று சொல்லி எழுந்து போய்விட்டார். அதன்மேல் தவமணிப்பிள்ளை மிக்க அவமானமடைந்து அன்னையையும், பிதாவையும் அன்புடன் ஆதரித்து வந்தார்.

(தொடரும்) கெம்பூர்-வீ. ஆறுமுகத்சேர்வை.

---

## பன் மொழிக் கோவை.

### (சில மகான்களின் அரிய உபதேசங்கள்)

இவ்வரிய உபதேசங்களில் சில தஞ்சையில் வெளியாகும் வாரப்பதிப்பாகிய "சமரசபோதினி" யில் வெளியாயிருந்தன. அவற்றோடு இன்னும் சில மகான்களின் அருள் வாக்கியங்களையும் சேர்த்துச், சிற்றறிவுடைய அடியேனால் இக்கோவை எழுதப்பெற்றது. எமக்கரிய தோழமையா விருப்பதுடன் ஆசிரியத்தன்மையும் பூண்டுவிளங்கும் ஆனந்தபோதினியைக் கண்ணுறும் ஒவ்வொருவரும் இதிலடங்கிய ஆழ்ந்த கருத்துக்களை நன்கு உணர்வார்களாக.—

1. சுவாதீனத்தின் பயன் சுகம்; சுவாதீனம் மனவுறுதியின் பயன். —(பெரிக்ளன்)

2. நம்மை அறநெறியில் நிற்கச் செய்விப்பதே சகல சமயங்களிலும் மெய்ச்சமய மாகும். —(ஸைனரோலா)



3. துக்கத்தைவிடக் கவலையை நீக்குவதே கடினம். நாளடைவில் துக்கம் நீங்கும், கவலை வளரும். —(மூான் பௌல்)

4. கோழை இறப்பது பலமுறை. வீரன் இறப்பது ஒரு முறையே —(ஷேக்ஸ்பியர்)

5. அவன் எதை உணரவில்லையோ அது அவன் பொருளல்ல-(கதே)

6. சத்தியத்தால் சுவாதீனம் அடைந்தவனே சுதந்தர புருஷன்; மற்றவர்கள் அனைவரும் அடிமைகளே. —(கௌப்பர்)

7. துன்பத்தை அதிகமாக அனுபவிக்கக் கூடியவனே அதிகமாக நன்மை செய்யக்கூடும். —(மில்டன்)

8. நான் என் கடமையைச் செய்துவிட்டேன்; அதற்காகக் கடவுளைத் தொழுகின்றேன். —(நெல்ஸன்)

9. அன்புடையவனே வாழ்பவன். —(அந்தோனிமுனி)

10. அறநெறியில் ஆசைகொள்; அதுதான் சுதந்தரம் அளிப்பது. (மில்டன்)

11. துக்கமார்க்கம் ஒன்றே துக்க நிவர்த்திக்குச் செல்லும் மார்க்கம். —(கௌப்பர்)

12. குற்றம் செய்வது மனிதகுணம், மன்னிப்பது தேவகுணம். —(போப்)

13. உன்னைப்பற்றி அபவாதம் உரைப்பின், அது மெய்யானால் திருந்துக; பொய்யானால் நகுக. —(எபிக் டெட்டஸ்)

14. நன்மைக்கு நன்மை செய்யாமை மனிதத் தன்மையற்றது. நன்மைக்குத் தீமை செய்தல் இராக்ஷசத் தன்மையுற்றது. —(செனிக்கா)

15. மனிதனுக்கு இவ்வுலகில் வேண்டுவது அற்பம்; அதுவும் சிறிது நாட்கே. —(கோல்ட் ஸ்மித்)

16. அன்புடையவனுக்குத் தெளிவாய் விளங்காம லிருக்கலாம். ஆனால் துவேஷ முடையவனுக்கு ஒன்றுமே விளங்குவதில்லை. —(இஸிடோர்முனி)

17. தனிமையாக இருக்க முடியாததினாலேயே சகல துன்பங்களும் உண்டாகின்றன. —(லா புரூயர்)

18. இன்பமுறுதல் எளிதான காரியமன்று. நம்மகத்தன் அதைக் காண்டல் மிக்க கஷ்டம்; ஆனால் அதை வேறெங்கும் காணவும் முடியாது. —(ஷாம்பர்ட்)

19. இராட்சதன் பலம் இருந்தால் நலம்; ஆனால் இராட்சதனைப் போல அதை உபயோகித்தல் தீது. —(ஷேக்ஸ் பியர்)

20. ஈதலாகிய பெரும்போகம் இத்தகைய தென்றறிய ஏழையா யிருக்கவேண்டும். —(ஜார்ஜ் எலியட்)

21. இசையின்றி இருபுகம் வாழ்தலினும் இசைபுற ஒருபொழுது வாழ்தலே ஏற்றமுள்ளது. —(ஸ்காட்)

22. உன்னை மெய்யனாக்கிக்கொள். அப்பொழுது உலகில் ஒரு துன்மார்க்கன் குறைந்தான் என்று நீ நிச்சயமாய் அறிந்துகொள்ளலாம். —(கார்லைல்)

23. நாணயம் நல்ல தந்திரமே. ஆனால் அதை அவ்விதம் மதிப்பவன் நாணயஸ்தன் அல்லன். —(வாட்லி)

24. எவரைக்காணுந்தோறும் இறைவன் ஞாபகம் வருகின்றதோ அவரே ஆண்டவன் அடியாரில் சிறந்தவர். —(முகமது நபி)

25. கீர்த்தி இழந்தவன் தன்னையே இழந்தவன். —(ஷேக்ஸ்பியர்)

26. கற்றவர் என்பவர் யார்? கற்றபடி நிற்பவரே. —(முகமது நபி)

27. ரோஜாச்செடியில் முள் இருப்பதாக வருத்தப்படாமல் முட்செடியில் மேலான மலர் உண்டாவதாக மகிழவேண்டும். —(ஆல்பரி)

28. அதிர்ஷ்டவசத்தால் அதிக நன்மை உண்டாகலாம். ஆனால் அவ்வித நன்மையையும் போதுமானதாகச் செய்வது சம்மனமே யாகும். —(பாயில்)

29. நட்பு அன்பின் மிகுதியால் வரும் செல்வமாகும். —(தாகூர்)

30. கற்புள்ளமாது தன் கணவன் மரித்தபின்னும் இடைவிடாது தான் அவன் கூடவே யிருப்பதுபோல், உபாசனாமூர்த்தியிடம் பூர்ண பக்தியுடையவன் ஈசுவரனோடு ஐக்கியம் அடைவான். —(ஸ்ரீராமகிருஷ்ணபரமஹம்சர்)

31. மக்களின் நடத்தையில் புண்ணியம் பாபம் என்னும் பாகுபாடே யில்லை. ஆனால் பலம் பலஹீனம் என்னும் பாகுபாடுகளே இருக்கின்றன. மனிதன் ஆத்மபலமடைந்து ஞானியாகி ஜடவுலகத்து சாதாரண பலத்தை ஜயிக்கிறான். —(ஸ்ரீரா. கி. பர்.)

32. நம்பிக்கை உள்ளவனுக்கு எல்லாமுண்டு. அது இல்லாதவனுக்கு ஒன்றுமே இல்லை. —(ஸ்ரீரா. கி. பர்.)

33. மனிதன் உண்மை பேசினாலொழிய உண்மைக் குறைவிடமாயுள்ள ஈசுவரனைக் காணல்முடியாது. —(ஸ்ரீரா. கி. பர்.)

34. ஞானம் புருஷன் போன்றது; பக்தி ஸ்திரீபோன்றது; ஞானமானது ஈசுவரனுடைய அந்தப்புர வாசல்வரையில்தான் செல்லலாம்; பக்தியோ அந்தப்புரத்திற்குள்ளும் செல்லும். —(ஸ்ரீரா. கி. பர்.)

35. உன் உணர்ச்சிகளையும், நம்பிக்கைகளையும், ஞானசாதனைகளையும் உனக்குள்ளேயே வைத்துக்கொள். அவற்றைப்பற்றி வெளியே பேசாதே. —(ஸ்ரீரா. கி. பர்.)



36. சிறு நெருப்புக்குச்சியின் தீ பெரிய தூலத்தை எரித்துவிடாது; ஆனால் காட்டுத்தீயானது (ஞானம்) எதையும் பஸ்பம் செய்துவிடும். —(ஸ்ரீரா. கி. பர்.)

37. உள்ளொன்று வைத்து வெளியொன்று வெளியிடாது பரந்த நோக்கத்துடன் வாழுங்கள். —(மஹாத்மா காந்தி)

38. தனக் கிஷ்டமில்லாத வேலைகளைப் பிறர்செய்தால் அதுபோல் தானும் செய்யாமல் அதிக ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். அதுவே பரமதருமம். —(ஸ்ரீபரமஹம்சச்சிதானந்தர்)

39. அஞ்ஞானிகள் நற்கருமங்களைச்செய்யப் பழகவேண்டும்; சிறிது விவேகமுள்ளவர்கள் திரிசிய உலகெல்லாம் காலாவட்டத்தில் அழிவதென்றெண்ணி சத்துவகுண விசிஷ்டர்களாய் பக்தி மார்க்கத்தை அவலம்பிக்கவேண்டும். —(ஸ்ரீபரமஹம்சச்சிதானந்தர்)

40. ஆகாயம் எதிலும் ஒட்டாமலிருப்பதுபோலும், விருத்திக்ஷயங்கள் சந்திரகலைக்கேயொழிய சந்திரனுக் கில்லாம லிருப்பதுபோலும் ஷட்பாவ (காமக்குரோதாதி) விகாரங்கள் சரீரத்திற்கே யொழிய ஆன்மாவிற் கல்லவென்று அறியக்கடவது. —(ஸ்ரீபர. ச. ர்)

தீ. நித்தியானந்தம், (ச. செ. 17036) போர்டு ஸ்கூல்மாஸ்டர்,
இராயக்கோட்டை, சேலம்.

## தனித்தமிழும் ஆங்கிலமும்.

(226-ம் பக்கத் தொடர்ச்சி.)

தமிழ் வார்த்தைகளில் ஆங்கிலக் கலப்பு:—அமிழ்தினு மினிய தமிழ் மொழியோ பாரதநாட்டது. ஆங்கிலம் மேனாட்டது. தமிழ், தன்னாட்டில் தோன்றுதொட்டு வழங்கப்படுவது. ஆங்கிலம், ஆங்கிலேயருடைய வருகை இந்தியாவிற் கேற்பட்டபிறகு இவண் வழங்கப்படுவது. ஆகவே உன்னாட்டு மொழியாகிய தீந் தமிழ் மொழிக்கும், வெளிநாட்டு மொழியாகிய ஆங்கிலமொழிக்கும் யாதொரு பற்றுமின்று.

எங்ஙனவே, நமது முன்னோர்கள் உள்நாட்டுமொழிகளைக் கற்றுவருங்கால், இந்தியாவில் நூதனமாகப்போந்த ஆங்கிலமொழியையுங் கற்கும்படி தம்மக்களை யம்மொழியின்மாட் டவர்கள்கொண்ட புதுமோகத்தால் ஏவிவந்தனர். தம்மக்கட்கு இன்றியமையாததாகிய—சிற்றுயிர்க் குறுதுணையாகிய—தெய்வத்தன்மை பொருந்திய—தேனினு மினிய தீந்தமிழ் மொழியைக் கற்கவிடாமல் தடுத்தும் வந்தனர். இங்ஙனந் தாய் தந்தையர்கள் நிகழ்த்திவந்ததனால் ஆங்கிலங் கற்கப் புகுந்த நண்பர்கட்குத் தமிழ் மொழியைக் கற்கவோ, அன்றி யம்மொழியின்மாட் டன்புறவோ இடமின்றிப் போய்விட்டது. அதன்பயனாக இன்று நிலவும் பாரதக்குழார் தமிழில் அதிகமும் முன்னேறாமல் வருகின்றது.

ஆங்கிலமொழியைக் கற்கப் புகுந்தவர்கள், அம்மொழியில் கொஞ்சம் கொஞ்சமாகப் பழக்கம் பெற்று வர வர, அவ்வார்த்தைகளைத் தங் கூட்டாளிகளுடன் சம்பாஷிக்கும்போது இடையிடையே தமிழ்மொழியைக் கலந்து பேசுவதும், தத்தம் வீடுகளிலுந் தாய் தந்தையர்கள் களிக்கத் தாங்கள் நூதனமாகக் கற்றுக்கொண்ட வார்த்தைகளைக் கலந்து கலந்து தம் இனிய தமிழ்மொழியைக் கெடுத்து, அவர்கட் கெடுத்துக்காட்டச் சம்பாஷிப்பதும் அவர்கட்கு ஓர் மகிழ்ச்சியே! இதை இற்றைமாணவரிடத்துக் காணலாம்.

இங்ஙனமாகப் புதுமையாய்வந்த ஓர் மொழியில் பழக்கம்பெற்ற ஒரு சிலர், பெருகிவர, அவர்கள் சம்பாஷணைகளுந் தமிழ் வார்த்தைகளைத் தள்ளியும், தள்ளியவற்றிற்குப் பதிலாக ஆங்கிலவார்த்தைகளைக் கலந்தும் நிலவி வந்தன. அப்பழக்கத்தினாற் போந்த முழுப்பயனும் இன்று வெளிச்சமாய்விட்டது. தனித்தமிழ் பேச ஒருவர்க்குந் தெரியாதென்று சொல்லும்படியும் வந்துவிட்டது.

ஆங்கிலம் பயிலப்படும் இடங்களாகிய இந்திய நகர்களில் இந்த வேடிக்கை அதிகம். கிராமங்களில் அதிகமாய்க் கிடையாது. ஆயினும் கலப்புண்டு. நகரங்களில் ஆங்கிலங் கற்போர் கணக்கிலர். கிராமத்தில் அது மிகக் குன்றுவன்றோ! இந்தியாவில் எங்கும் பேசுவோர் மேனாட்டார் தவிர, மற்றெல்லோரும் இந்தியரே. அவர்கள் தம் தாய்மொழியைத் தனிப்படப் பேசுகிறார்களென்று துணிந்து சொல்வதற்கு நாவெழவில்லை. தமிழர்களாகிய நாமெல்லோரும் வார்த்தையாடும்போது தமிழில்தான் வார்த்தையாடுகின்றோம். ஆனால் அதனிடையில் நாம் கொண்டு கொட்டும் ஆங்கிலவார்த்தைகட்கோ ஓர் எல்லையில்லை. ஒரு வாக்கியமாவது ஆங்கிலங்கலவாமல் பேசுகிறோமாவென்பது ஐயமே. இங்ஙனங் கலந்துபேசப்படின் தமிழைத் தமிழென்பதா! ஆங்கிலமென்பதா! தமிழாங்கிலமென்பதா? ஆங்கிலத் தமிழென்பதா? இம்முறையில் எதையுஞ் சேராமல் தற்கால சம்பாஷணைகள் மிகக் கேடடைந்து நகைப்புக்கிடமாக வழங்கிவருகின்றன. ஆங்கிலம் தமிழில் கலந்து மொழியப்படுங் காரணத்தால் தமிழ் வார்த்தைகளெல்லாம் மறைந்து வருகின்றன. தமிழ்மொழியுங் கொலை செய்யப்பட்டு வருகின்றதென்னலாம். ஆங்கிலமொழியைக்கற்று உத்தியோகங்களிலமர்ந்து விளங்கும் எமது சகோதரர்களும், ஆங்கிலங்கற்று வரும் மாணவர்களும், ஆங்கிலங்கற்றதற்குத்தகுந்த மதிப்புத்தர வேண்டுமென்ற எண்ணத்தினாலோ, அல்லது தமிழ்மொழியில் ஆங்கிலங்கலந்தாற்றான் தமிழ்மொழிக்குப் புகழுண்டு என்ற நினைவினாலோ, அன்றி ஆங்கிலமொழியைத் தமிழிற்கலந்தால் ஆங்கிலத்திற்கே மதிப்புண்டென்ற கருத்தாலோ, அன்றி மற்றெக்காரணத்தை முன்னிட்டோ தமிழ்நாட்டிற் பிறந்து தமிழர்கட்கு மக்களாகித் தாய்மொழியாகிய தமிழ்மொழியை விருத்திசெய்யவேண்டிய எமது சகோதரர்கள் அத்தமிழ்மொழியை ஆங்கிலத்தினால் மிகக் கேடடையச் செய்துவருகின்றார்கள்.



ஆங்கிலம் கற்றதற்காகத் தனிமதிப்பு, அதைக் கற்றவர்கட்கு வேண்டியதானாலும், அவர்களைப்போன்றே ஆங்கிலம் பயின்றவர்களிடத்தில் சுத்தமாக ஆங்கிலத்திலேயே உரையாடல் வேண்டும். அங்ஙனந் தனியாக ஆங்கிலத்திலுந் தமிழ்கலவாமல் பேசினால் அதற்கும் மதிப்பு உண்டெனலாம். ஆங்கிலத்திற் றனிப்பட மொழிவதால் ஆங்கில பாஷாபிவிருத்தியும் அவர்கட்கு உண்டாகலாம். அவர்கள் சம்பாஷணைகளுந் தனி ஆங்கிலமாகவே விளங்கும். அங்ஙனமின்றி அரைகுறையாக ஆங்கிலங் கற்றவர்போல் முழுதும் ஆங்கிலத்திற் பேசாமல் அரைப்பங்கு ஆங்கிலமும், அரைப்பங்கு தமிழுமாகக்கலந்து தம் சம்பாஷணைகளை இருவழியிலுங் கெடுத்து வருகின்றனர். இம்முறையை நன்றாக ஆழ்ந்து பார்த்தால் தமிழராகிய நமக்கு வெட்கமாக இருக்குமன்றோ!

ஆங்கிலங்கற்று, ஆனந்தத்தை நுகர்ந்துவரும் நண்பர்கட்குத் தமிழில் முழுதும் பேசினால் வெட்கம் போலும்! அதனாற்றான் அவர்கள் தமிழிற் பேசப் பின்னிடைகிறார்கள். அவர்களிற் சிலர், தமிழும் ஓர் பாஷையா? என்று இகழ்ந்துரைக்கவுந் தலைப்படுகின்றனர். தமிழையே ஓர் பாஷையாகக் கருத மனமற்றபோது தமிழில் பேசுவதற்கு மாத்திரம் எங்ஙனம் அவர்கட்கு மனம் எழும். தமிழை ஓர் பாஷையாக அவர்கள் கருதாதது அவர்களுக்கு நீதியாகத் தோற்றும்! ஏன்? தமிழில்—தமிழ் நூற்களின் ஆராய்ச்சியின்மையால் அவர்கட்கு அதன் தெய்விகத்தன்மையு மருஞ்செய்கைகளும் புலப்பட ஏதுவில்லை. இதுவும் நந் தாய்நாடு செய்த குறை போலும்!

தமிழில் பேசுவது ஆங்கிலம் கற்றவர்கட்குக் குறைவாகும்போது தமிழ்நாட்டில்—தமிழர்கட்குப் பிறந்துங் குறைவாகாதோ? தமிழை விழிவாகப்பேசும்—கருதும் அன்பர்கள் இதைக் கவனிக்க வேண்டுவதும் அவசியமே. (தொடரும்.)

மாணிக்கநாயகர், தமிழாசிரியர்,
திருப்புவனை, புதுவை.

---

## நாலடியார் வசனம்.

(288-ம் பக்கத் தொடர்ச்சி.)

### 29-ம் அதிகாரம்—இன்மை (பொருளில்லாமை.)

ஒருவன் செக்கிறம் பொருந்திய ஆடையை இடையில் உடுத்திக் கொண்டு வாழ்ந்தாலும், பத்தோ எட்டோ பொருளை உடைத்தாயிருந்தவால் பலரிடத்தும் பெருமை படைவான். மதிக்கத்தகுந்த (உயர்வாகிய) குடியிற்பிறந்தாலும் சிறிதும் பொருளில்லாதவர் செத்த பிணத்தைக்காட்டிலும் கடைப்பட்டவராவர். (1)

நெய்யானது நீரைவிட நுட்பமானது. நெய்யைவிட புகை நுட்பமானதென்பதை யாவரும் அறிவர். ஆராயுமிடத்து யாசகம் செய்தலாகிய

துன்பத்தையுடைய தரித்திரன் (அந்தப்) புகையும் புகமுடியாத வாயில்களில் புகுவான். (2)

(தினைக்) கொல்லைகளில் காவல்புரிவோர் கல்லைக்கொண்டு கிளிகளை அதட்டி ஓட்டுதற்கிடமான காடுகள் பொருந்திய நாட்டையுடைய பாண்டியனே! கற்கள் மிகுந்துள்ள உயர்வாகிய மலைகளில் காந்தள் என்னும் புஷ்பங்கள் புஷ்பிக்காவிட்டால் சிவந்த புள்ளிகளையுடைய வண்டின் கூட்டங்கள் (அங்கே) போகமாட்டா. (அதுபோல) பொருளில்லாதவர்களுக்கு விரும்பிவரும் பந்துக்களில்லை. (3)

கையிற் பொருள் உண்டானகாலத்தில் உயிர்நீங்கின உடலைச் சுற்றிக் கொண்டிருக்கும் காக்கைகளைப்போல ஆயிரம்பேர் அடிமைகளாகக் கூடியிருப்பார்கள். (கைப்பொருளில்லாமல்) வண்டுபோ லலையுங்காலத்தில் 'சுகமா யிருக்கின்றீரா?' எனக் கேட்போரும் இல்லை. (4)

சப்திக்கின்ற நீரருவியானது கற்களின்மேல் விழுந்து (அவற்றின் மாசைக்) கழுவிச் சுத்தஞ்செய்தற்கிடமான கூட்டமான மலைகள் பொருந்திய நல்ல நாட்டையுடைய பாண்டியனே! தரித்திரத்தால் பீடிக்கப்பட்டவர்களுக்கு (அவர்கள் பிறந்த) குலப்பெருமை கெடும்; பெரிய ஆண்தன்மையும் அழியும்; மிக்க கல்வியும் கெடும். (5)

வயிற்றினுள் உண்டான மிகுந்த பசியாகிய நோயால் தன்னிடத்து ஒன்றை(ப்பெற) விரும்பிவந்தவர்களுக்கு உள்ளூரிலிருந்தும் ஓர் உதவியும் செய்யமாட்டாத தரித்திரன், உள்ளூரி லிருந்துகொண்டு தன் உயிரைப் பயனில்லாமல் கழித்துவிடாமல் தான் தூரதேசத்திற்குப்போய் (அன்னியரின்) விருந்தாளியா யிருப்பது நல்லது. (6)

கூர்மையாகவுள்ள முல்லையரும்புகளை (தம் அழகினால்) அழியச் செய்யும் பற்களையுடையவளே! தரித்திரமென்னும் துன்பத்தை யடைந்திருப்போர், நற்குணங்களையும், மிகுதியாகத் தமக்குள் உண்டான புத்திகூர்மையையும், மற்றும் யாவையும் ஒருங்கே இழந்துவிடுவர். (7)

இழிவாகிய தரித்திரத்தின் வழியிலே அகப்பட்டு (தம்மிடம்வந்து யாதாயினும் ஓர் பொருளை) யாசித்தவர்களுக்குக் கொடுக்கமுடியாமல் கஷ்டமான வழியிலேபொருந்தி (தன் வயிற்றை வளர்ப்பதற்காகமாத்திரம்) முயற்சிசெய்து உள்ளூரில் வாழ்வதைவிட, தூரமானவழியிலேபோய் வரிசையாயுள்ள வீடுகளிலெல்லாம் பிச்சையெடுப்பதற்குக் கையை நீட்டுவதாகிய கெட்டவழியில் வாழ்தலே சிறந்ததாம். (8)

(மனிதர்கள்) தங்கள் செல்வம் முழுவதும் அழிந்து ஒழிந்துபோனால், பொன்னால் செய்யப்பட்ட கடகங்களை யணிந்துகொண்டிருந்த தங்கள் கைகளால் குனிந்து கீரைகளைப் பிடுங்கிச் சமைத்து (உண்ணப் பாத்திரமில்லாமல்) தேங்காய் ஓட்டைப் பாத்திரமாகக்கொண்டு அந்த உப்பில்லாத வெந்த கீரையைத் தின்று மன உற்சாகங்கெட்டு வாழ்வார்கள். (9)



நீரருவியானது ஒழுகும்படியான மிக்க சிறப்புப்பொருந்திய குளிர்ந்த மலைகள் பொருந்திய நல்ல நாட்டையுடையவனே! சப்திக்கும்படியான புள்ளிகளையுடைய அழகுமிகுந்த வண்டுக்கூட்டங்கள் புஷ்பங்களில்லாத காலத்தில் கொம்புகளின்மேல் போகமாட்டா. (10)

## 30-ம் அதிகாரம்—மானம்.

(எப்பொழுதும் தம் நிலையினின்று தாழாமலிருத்தலும், வினையால் தாழ்வுவந்தால் உயிர் வாழாதிருத்தலுமே மானம்.)

(தங்கள்) செல்வம் வலிமையுடையதாக இருப்பதால் நற்குணமில்லாதவர்கள் (அந்தப் பணத்தைக்கொண்டு) செய்யும்படியான வரம்பு கடந்த நடக்கையைக் கண்டபொழுது மானமுடையவர்களின் மனமானது மூண்டெரிதல் பொருந்திக் காட்டில் பற்றியெழுந்த அக்கினியைப்போலக் கொதிக்கும். (1)

தமது மானத்தை (அழியாமல்) காத்துக்கொள்ளும் குணத்தையுடையவர்கள் (வறுமை முதலிய துன்பங்களால் தங்கள் உடம்பு) எலும்பு மாத்திரமாய்ச் சிதைந்துபோவதா யிருந்தாலும் நற்குணமில்லாதவர்களின் பின் சென்று தமது கஷ்டத்தைச் சொல்வார்களோ? (சொல்லார்.) (ஆயினும்) தமது துன்பத்தை(த்தாம்) சொல்வதற்கு முன்னமே தெரிந்துகொள்ளும் தன்மையுடைய சூக்ஷ்மபுத்தியுள்ளவர்களுக்குத் தாமடைந்த துன்பத்தைச் சொல்லமாட்டார்களோ? (சொல்வார்.) (2)

(எளியவர்கள்) நாமானால் (செல்வர்கள் நம் வீட்டிற்குவந்தகாலத்தில் அவர்களைக் கனப்படுத்தக்கருதி) உள்ளே அழைத்துச் சென்று நம் வீட்டைக் காட்டுவோம். செல்வச் செருக்குடையவர்களானால் (பிறர்) கண்டுவிட்டால் (நம்வீட்டுக்) குட்டு வெளிப்பட்டுவிடும் என்று நினைப்பவர்களைப்போல (தம் வீட்டைக்காட்டக்) கூச்சப்பட்டு வீட்டின் வெளிப்புறத்தில் வைத்துச் சோறுபோடுவோர்கள். ஆகையால் செல்வர்களுடைய சிநேகத்தை மறந்துவிடு. (3)

கஸ்தூரிவாசனை வீசும் கூந்தலையுடையவளே! மானமுள்ளவர்களுடைய மதிப்பானது இம்மைக்கும் நல்லது; நியாயவழிக்கும் தவறாது; மறுமையிலும் நன்மைதரும். ஆகையால் (அது) நன்மை யுடையதாம். (4)

பெரியோர் (தங்களுக்கு) மரணம் நேரிடுவதாயிருந்தாலும் பாவமும் பழியும் உண்டாகும்படி நேருகிற காரியங்களைச் செய்யமாட்டார்கள். மரணமானது ஒருநாளே துன்பந்தருவது. (அது) பாவம் பழி என்பவைகளைப்போல (அநேககாலம் வரையில்) சகிக்கமுடியாத துன்பங்களைச் செய்வதில்லை. (நெடுங்காலம் நரகம் முதலிய சகிக்கமுடியாத துன்பங்களைத்தரும் பழிபாவங்களைச் செய்வதைவிட, ஒருநாளைய துன்பத்தைத் தரும் மரணம் மிகவும் சிறந்ததல்லவா?) (5)

வளப்பம்பொருந்திய இப்பெரிய உலகத்தில் வசிப்பவர்களெல்லாரிலும் செல்வமுள்ளவராயினும் கொடாதவரானால் (அவர்கள்) தரித்திரமுள்ளவர்களே; தரித்திரமடைந்தகாலத்திலும் செல்வமுடையவர்களிடம் சென்று யாசியாதவர்கள் பெருமுத்தரையரென்னும் பிரபுவைப்போன்ற செல்வர்களே. (6)

பக்கங்களில் பரவிய வில்லைப்போன்ற புருவங்களையும் வேல்போன்ற நீண்ட கண்களையு முடையவளே! அதமன் எப்பொழுதும் (தன்னை) வருத்தும் பசிக்குப் பயப்படுவான்; மத்திமன் எப்பொழுதும் துன்பத்திற்குப் பயப்படுவான்; உத்தமன் சொற்குற்றத்திற்குப் பயப்படுவான். (7)

இவர் (மிகவும்) நல்லவர்; மிகவும் அருளுடையவர்; (பாவம் மிகவும்) தரித்திரராய்விட்டார் என்று அவமதித்துச் செல்வமுடையவர்கள் அற்பப் பார்வையாய்ப் பார்க்கும்பொழுது உத்தமர்களாகிய பெரியோர்களின் மனமானது கருமானுடைய உலைக்களத்தில் ஊதும் நெருப்பைப்போல உள்ளுக்குள்ளே கொதிக்கும். (8)

தம்மை விரும்பி வந்தவர்களுக்குக் (கொடுக்க இயலாததைக்) கொடாதிருத்தல் நாணமன்று; பயத்தால் நாணுதல் நாணமன்று; தாம் செல்வக் குறைவையுடைய எளியவர்களாயிருக்கையில், தம்மைவிட மேலான செல்வவான்கள் தமக்குச்செய்த எளிமையைப் பிறர்க்குச் சொல்லாமலிருப்பதே நாணமாம். (9)

காட்டுப் பசுவைக் கொன்ற காட்டில் வசிக்கும்படியான புலியானது (தனக்கு) இடதுபக்கத்தில் விழுந்ததைத் தின்னாது. (அதுபோல மிக்க) செல்வத்தையுடைய சொர்க்கலோகமே தம் கைவசமாவதாயிருந்தாலும் பெரியோர் மானம் கெடுவதாயிருந்தால் (அதை) விரும்பார். (10)

(தொடரும்.) பூ. ஸ்ரீநிவாசன், தமிழ்ப்பண்டிதர், சித்தூர்.

---

## ஆரிய சித்தாந்தம்.

(243-ம் பக்கத் தொடர்ச்சி.)

### ஸ்மிருதி—தரும இலக்கணம்.

இனி தருமம் என்பது யாது? அதன் சொரூபம் எப்படிப்பட்டது? என வினா நிகழக்கூடும். அதற்கு விடையாக ஸ்மிருதிகளிலிருந்து சிலவற்றை யெழுதுவாம்:

வாக்கு மனங்களாலுண்டாவதும், இகபரங்களுக்குக் காரணமாயிருப்பதும், அபூர்வம் என்ற பேர் பெற்றதுமான ஓர் ஆத்மகுணமே தருமம் என்பது என்று அரதத்தாசாரியர் கூறினார். வேதாந்தம் அறிந்தவர்களும் விருப்பு வெறுப்பு இல்லாதவர்களுமான பெரியோர்களால் சோகம் மோகம் இல்லாமல் நித்தியதருமமென்று கொண்டாடப்படுவதும், இதுவே அரிய பயனைக் கொடுப்பது என்று மனம் ஒத்து அங்கீகரிக்கப்படுவதும் எதுவோ



அதுவே தருமமாம். ஓ முனிவர்களே! நீங்கள் அறிந்துகொள்ளுங்கள். சிஷ்டாசாரமும், சுருதி ஸ்மிருதிகளில் கூறப்படுவனவுமான இந்த மூன்று கருமங்களும் முக்கியமான தருமங்கள். ஆதலால் இம்மூன்றிலும் அறிவிற் சிறந்த மறையோர் பற்றுதலுள்ளவர்களாயிருக்கவேண்டும் என்று மனு கூறினார். இது மனதின்குணம் என்பதாயிற்று. அதனாலேதான் குருக்ஷேத்திரத்திலும் சற்பாத்திரமறிந்து மனப்பூர்வமாய்க் கொடுப்பதும் தர்மமாம் என்றார் யாக்ஞவல்கியர். இத்தருமம் சுத்தத்தைச் செய்து பரம்பரைக்கிரமத்தில் முத்திக்கு ஏதுவாகும் என்று அவரே கூறினார். அதனாலேதான் விருப்பும் வெறுப்புமற்ற பெரியோர்களே தருமத்துக்கு அதிகாரிகள் என்றார். காமமற்ற நற்சித்தமுடையவர்களையே அதிகாரிகள் என்றதனால், அவர்கள் பரமேசுவரனையன்றி வேறு எப்பொருளையும் கருதார்கள். ஆதலால் மோட்சபரியந்தமான சகல ஐசுவரியங்களையும் கொடுத்தருளுவரென்பது கருத்து. உனக்கு எக்கருமத்திலாவது ஐயம் உண்டானால் வேதமோதியுணர்ந்த சிஷ்டர் அவர் வேதங்களிற் கண்ட வழியை அனுஷ்டித்துத் தருமநெறியில் நிற்பராதலால், அவர் செல்லும் வழியைப்பற்றி நட என்று வேதம் ஆக்ஞைதந்திருக்கிறது. மனம் ஒத்து உண்டாகும் உள்ளக் கிளர்ச்சியாகிய குணமே தர்மம் என்று கூறுவர் பெரியோர். எதைச் செய்தால் வேதமுணர்ந்த பெரியோர் புகழ்வார்களோ அதைத் தருமமென்றும், எதைச்செய்தால் பெரியோர்கள் நிந்திக்கிறார்களோ அதை அதருமமென்றும் சொல்வர் என்று விசுவாமித்திரர் சொன்னார். உண்மை, புலனடக்கம், சுத்தம், களிப்பு, வெட்கம், நெறியுடைமை, ஞானம், சாந்தி, கருணை இவை எப்போதும் வேண்டிய தர்மங்கள் என்று வியாசர் கூறினார். இவற்றுடன் கூடிச் செய்யப்படும் கர்மமே தர்மசொரூபமென்பது கருத்து. ஞானம், யாகம், பெரியோரைப் பூசித்தல், வேதத்தில் ஆசை இவை தர்மமாமென்று பிரகஸ்பதி கூறினார். போக்கியப் பொருள்களில் விருப்பமில்லாமையும், ஆத்மஞானமும் பெருமையை பயக்கும் தன்மையன என்று பஞ்சசிக முனிவர் கூறினார். யாகம், சிஷ்டாசாரம், புலனடக்கம், ஜீவஹிம்சை செய்யாதிருத்தல், வேதமோதல் இவற்றையெல்லாம் சித்தவிருத்தியை யடக்கி ஆத்மஞானம் பெறுதலையே முக்கியதர்மமாமென்று யாக்ஞவல்கியர் மீண்டும் கூறினார். ஆபஸ்தம்பர்,—தர்மாதர்மங்களிரண்டும் சரீரத்துடன்வந்து நாங்கள் தர்மம், நாங்கள் அதர்மம் என்று சொல்லி நிற்பதைக்கண்டதில்லை. தேவகந்தர்வ பிதிர்களும், இது தர்மம் இது அதர்மமென்று குறிப்பிட்டுச் சொல்லவுமில்லை. ஆதலால் ஆரிய சிரேஷ்டர்கள் எதைப் புகழ்கிறார்களோ அதைத் தர்மம் என்றும், எதை நிந்திக்கிறார்களோ அதை அதருமமென்றும் அறிந்துகொள்ளவேண்டும் என்றார். ஆதலால் பாபமற்ற மனதிலுதிக்கும் நற்சீலமே தர்மசொரூபமாமென்பது விளங்கும். இதனால் அறியத்தக்கது சிஷ்டர் உறவும், சகவாசமும், அவர் கூறுவதைக்கேட்டு நடப்பதுமாகிய தர்மகுணமாம். இதற்கு மாறுபடுவது அதர்மமாம். ஆதலால் எப்போதும் சன்மார்க்கருடன்கூடி அவர் மார்க்கத்தை

அனுஷ்டிப்பதே தர்மாசாரமாம். இதைப்பற்றி ஒரு இதிகாசக் கதையை வரைவோம்:

கௌசிக நதிக்கரையில் விசுவாமித்திர முனிவர் ஒரு சிறந்த யாகம் செய்தார். அந்த யாகத்திற்காக வசிஷ்டர், வாமதேவர், காத்தியாயனர் முதலிய பிரமரிஷிகளும், அநேக ராஜரிஷிகளும், நாரதாதி தேவரிஷிகளும் வந்து கூடினார்கள். யாகம் வெகு சிறப்பாக நடந்தேறியது. வேள்வியை முடித்து அபவிருதஸ்நானம் செய்தபிறகு ரிஷீசுவரர்களுக்கும் மற்றைய அந்தணர்களுக்கும் ஸமாராதனை செய்தார். கடைசியில் வந்தவர்களுக்குத் தகுந்தபடி மரியாதை செய்தார். பின் வசிஷ்டரிடம்வந்து தமது கர்வத்தினால் அவரைநோக்கி "வசிஷ்டமஹாமுனிவரே! நான் உமக்கு என்ன மரியாதை செய்யப்போகிறேன். அநேக ஆயிரவருஷம் கொடுந்தவம் செய்தேன். அதில் ஒரு ஆயிரவருஷ தவப்பலனை உமக்குக் கொடுக்கிறேன்" என்று இறுமாந்து கூறிக்கொடுத்தார். வசிஷ்டர் அந்த மரியாதையைப் பெற்றுக்கொண்டு இவன் கர்வத்தை அடக்கவேண்டுமென்று சிந்தித்துக் கொண்டு போய்விட்டார்.

பிறகு வசிஷ்டமுனிவரும் ஒரு பெரிய வேள்வி செய்தார். அதற்கு விசுவாமித்திரர் முதலிய சகல ரிஷிகளும் வந்திருந்தார்கள். யாகத்தை நிறைவேற்றிப் பூர்த்திசெய்தபின் காமதேனுவினால் எல்லாருக்குந் தெய்வ போஜனம் அளித்துத் திருப்தி செய்வித்தார். அதன்பின் முறைப்படி எல்லாருக்கும் மரியாதைசெய்தார். விசுவாமித்திரரிடம்வந்து "முனிபுங்கவரே! நீர் தபோநிதியாயுள்ளவர். உமக்குச் சமானமான தவசிரேஷ்டர் மூவுலகத்திலும் இல்லை. உமக்கு நான் எப்படி மரியாதை செய்வதென்று தோன்றவில்லை. ஆயினும் ஒன்றே ஒன்று இருக்கிறது. அதைப் பெற்றுக் கொள்ளும். அதாவது ஒருகாலத்தில் நான் தேவலோகம் போயிருந்தேன். அவ்விடத்தில் இந்திரன் சிஷ்டர்களை வரவழைத்து ஒரு சபை கூட்டினான். அந்தச் சபையில் நானும் ஒருநாழிகை தங்கியிருந்து அந்த மஹாத்மாக்களாகிய சிஷ்டசங்கத்தில் சகவாசம் செய்தேன். அந்த ஒருநாழிகை சகவாச பலனில் உமக்குக் கால்நாழிகை பலனைக் கொடுக்கிறேன்" என்று தாரை வார்த்தார். விசுவாமித்திரருக்கு மஹாகோபம் வந்துவிட்டது. "வசிஷ்டரே! நான் ஏதாவது கேட்டேனா? நான் வேள்வியைத் தரிசிக்க வந்தவனேயன்றி உம்மிடம் பரிசுபெற வரவில்லை. என் வேள்வியில் உமக்கு நான் ஆயிரவருஷ தவப்பலனைக் கொடுத்தேன். நீர் அதற்குப்பதிலாகச் சிஷ்டர்கள் கூடிய சத்சங்கத்தில் கூடியிருந்த ஒரு அற்பநாழிகைப் பலனில் கால்நாழிகைப் பலனைக் கொடுத்தேன் என்று கூறி என்னை அவமானம் செய்தீரே! இப்படி என்னை அவமதிக்கலாமா?" என்று கடுகடுத்துக்கூறிச் சபையாரைநோக்கி "இது நியாயந்தானா? நீங்கள் சொல்லுங்கள்" என்று கேட்டார். அதற்குச் சபையார் இன்னது சொல்வதென்று தோன்றாமல் மௌனமாயிருந்தார்கள். விசுவாமித்திரரோ விடுவதாயில்லை. அடிக்கடி



சபையாரைக் கேட்டார். அப்போது வாமதேவர், "வசிஷ்டமுனிவரே! தக்க சமாதானங்கூறி இவரைச் சாந்தப்படுத்தும்" என்று கூறினார். வசிஷ்டர் விசுவாமித்திரரைநோக்கி "முனிவரரே! நீர் சென்று சூரியனையும் ஆதிசேஷனையும் அழைத்துக்கொண்டுவாரும். அவ்விருவருமே நமது வழக்கைத் தீர்க்க வல்லவர்கள்" என்று சொல்லி அனுப்பினார். விசுவாமித்திரர் அதிக கோபத்துடன் சூரியனிடம் சென்றார்.

"சூரியபகவானே! எனக்கும் வசிஷ்டருக்கும் ஒருவழக்கு நேர்ந்திருக்கிறது. அந்த வழக்கைத் தீர்க்கும்பொருட்டு நீர் யாகசபைக்கு வரவேண்டும். தயவுசெய்து எழுந்தருளும்" என்றார். சூரியன் "விசுவாமித்திரரே! உமது மகிமையை நான் அறிவேன். உம்மை மறுத்துப்பேசும் வல்லமை எனக்கு இல்லை. என் தொழிலைச் சற்றுக் கவனியும். ஒரு க்ஷணத்துக்கு நான் நூறுகாதம் செல்லவேண்டும். இந்தத்தேரைவிட்டு நான் இறங்கி வந்தால் என்வேலை நடவாதே. நடவாவிட்டால் உலகத்துக்கு எவ்வளவு கெடுதி உண்டாகும். அதற்கு ஒரு வழிசெய்தால் நான் வரத் தடையில்லை" யென்றார். விசுவாமித்திரருக்கு ஒன்றுந் தோன்றவில்லை. உடனே அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டு ஆதிசேஷனிடம்போய் அவனிடம் தமது சங்கதியைக்கூறி அவனை அழைத்தார்.

அவன் "முனிவரே! இந்தப் பூமி என் தலைமேல் நிலைபெற்றிருக்கின்றது. நான் வருவதாயிருந்தால் எனக்குப் பதிலாக இந்தப் பூமியைத் தாங்க ஒருவர் வேண்டுமே. அதற்கு ஒரு உபாயம் செய்தால் நான் வரத் தடையில்லை" என்று சொன்னான். விசுவாமித்திரருக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை. சற்றுநேரந் திகைத்துநின்று பின் யாகசபை வந்து சூரியனும் சேஷனும் கூறியதைச்சொல்லி யாது செய்வது என்றார். சபையார் வசிஷ்டரை நோக்கி "வசிஷ்டரே! சூரியனும் ஆதிசேஷனும் வரவேண்டியது அவசியமானால் நீரேபோய் அழைத்துவாரும்" என்று கூறினார்கள்.

வசிஷ்டர் தமது யோகவலிமையால் வானமார்க்கமாய்ச்சென்று சூரியனுக்கு எதிரில் நின்றுகொண்டு "பகவானே! எங்களுடைய வழக்கைத் தீர்க்கும்பொருட்டு எங்கள் சபைக்கு எழுந்தருளவேண்டுகிறேன். உமது உத்தியோகத்துக்குத் தகுந்த ஏற்பாடு செய்கிறேன். இரதத்தைவிட்டு இறங்கியருளும்; நாம் முன்பு ஒருகாலத்தில் சிஷ்டர்கள்கூடிய சபையில் ஒருநாழிகை யிருந்தோமல்லவா? அந்தப் பலனில் கால்நாழிகைப் பலனை விசுவாமித்திரருக்குக் கொடுத்துவிட்டேன். மீதியிருப்பதில் கால்நாழிகைப்பலனை உமக்குப்பதிலாக வைக்கிறேன்" என்று கூறிக் கால்நாழிகைப் பலனைத் தேரில் ஆவாகனம் செய்தார். அது சூரியனைப்போல ஒளிவீசிக் கொண்டு திவ்விய சொரூபமாய் நின்றது. அருணன் தேரை ஓட்டிக் கொண்டு போய்விட்டான்.

பிறகு இருவரும் ஆதிசேஷனிடம்போய் அவனிடம்பேசி அவனுக்குப் பதிலாக முனிவர் கால்நாழிகைப்பலனை அவன் ஸ்தானத்தில் ஆவாகனம் செய்தார். அது ஒருபெரிய உருவங்கொண்டு பூமியைத் தாங்கிக்கொண்டு நின்றது. பிறகு மூவரும் வானமார்க்கமாய்ப் புறப்பட்டுச் சபையில்வந் திறங்கினார்கள். விசுவாமித்திரரும் சபையாரும் ஆச்சரியத்துடன் "வசிஷ்டமுனிவரே! இவர்களை யெப்படி அழைத்துக்கொண்டு வந்தீர்?" என்று கேட்டார்கள். வசிஷ்டர் "முனிவரர்களே! விசுவாமித்திரருக்குக் கொடுத்தது போக மீதியாயிருந்த என் சற்சங்கசகவாசபலனில் கால்நாழிகைபலன் சூரியனுடைய அதிகாரத்தைச் செலுத்துகின்றது. மற்றொரு கால்நாழிகை பலன் பூமியைச் சுமந்துகொண்டு நிற்கின்றது. மிச்சமான கால்நாழிகை பலன் இகபரசாதகார்த்தமாக எனது ஆத்மாவில் கலந்துவிட்டது" என்றார். எல்லாரும் சந்தோஷமாக வசிஷ்டரைக் கொண்டாடி "முனிவரே! தங்களால் நாங்கள் ஒரு அற்புதமான விஷயத்தைத் தெரிந்துகொண்டோம்" என்று கூறிப் புகழ்ந்தார்கள்.

விசுவாமித்திரரும் வசிஷ்டரைப் புகழ்ந்து "நான் உமக்குக்கொடுத்த ஆயிரவருஷ தவப்பலன், நீர் எனக்குக்கொடுத்த சற்சங்கசகவாச பலனில் கால்நாழிகை பலனில் கோடியில் ஒருபங்குமாகாது. என்குற்றத்தை மன்னித்தருளும்" என்று பிரார்த்தித்து வேண்டினார். பிறகு இருவரும் உறவாயினர். எல்லாரும் தத்தம் ஆசிரமம் போய்ச் சேர்ந்தார்கள். ஆதலால் சிஷ்டருடைய ஆசாரமும் வசனமும் பெரும்பயன் அளிப்பன என்று தெளியலாம். இந்தக்கதை குணார்த்தவாதமாம். சற்சங்க சகவாசத்தையும் சத்துக்களுடைய மகிமையையும் விளக்க எழுந்ததேயாம். இதனால் நாம் சிஷ்டாசாரத்தைப் புகழ்ந்து அவர்கள் சென்றவழியேசென்று உய்வோமாக. சிஷ்டர் இலக்கணத்தைக் கொஞ்சம் பின்னால் வரைவோம்.

(தொடரும்) சிவானந்தசாகர யோகீஸ்வரர்.

## நத்தைச்சூரி—ஓர் நல்ல பானம்.

நத்தைச்சூரி என்பது புன்செய்க் காடுகளில் முளைக்கும் ஒருசெடி; முக்காலடி உயரம் கொடிபோல் பல கிளைகளுடன் வளருகிறது. இதன் இலை துவரையிலை போன்றது. கொஞ்ச கனமும் ஸ்வல்ப நீர்ச்சத்து முள்ளது. காய்கள் மிளகுப் பிரமாணமுள்ளவை. காபிக்கொட்டையைப் போல பிளவுபட்டுப் பொருந்தியுள்ளவை. இதன் விதையை நெய்யில் வறுத்து, உரலிலிட்டு இடித்துப் பொடிசெய்து சலித்தெடுத்துப் பிரதிதினமும் காலையில் நபர் 1-க்கு வெருகடிப் பிரமாணம் அதாவது மூன்றுவிரல்களால் பிடிக்குமளவு எடுத்து ½ படி ஜலத்தில் போட்டுக் கொதிக்கவைத்து அக்கஷாயத்தை வடிகட்டி யெடுத்து அதில் சர்க்கரை சேர்த்துச் சமமாக ஆவின்பால் கலந்து மனிதர் சாப்பிட்டுவரும் பட்சத்தில் தாதுவிருத்தியும்,



இரத்தசுத்தியும் உண்டாவதுடன் நீரிறைப்பு, மேகம் முதலிய வியாதிகளும் தீரும். இவ்விவரம் பழமையான ஏட்டுப் பிரதிகளிலிருந்து தெரிகிறது.

இதனால் காபியைக்காட்டிலும் அதிக உத்சாகம் உண்டாகிறது. ஆனால் காபியால் ஏற்படுகிற மூத்திரரோகங்கள் ஏற்படுவதில்லை. தேகபலமுண்டாகிறது. சிரங்கு முதலிய தோலைப்பற்றிய வியாதிகளே வராமலிருக்கின்றன. இது அனுபோகமான கைகண்ட மருந்தாயும், ஆகாரமாயுமுள்ளது.

டை விதையைப் பொடிசெய்து விஞ்சை லேகியம் என்று சில வைத்தியர்கள் செய்து மனிதர்க்குக் கொடுப்பதால் நரம்புத்தளர்ச்சி நீங்கித் தேகபலமுண்டாகிறது.

டை வேரை அம்மியிலிட்டு அரைத்து உருண்டைசெய்து 5 வேளை சாப்பிடும் பட்சத்தில் அரையாப்பு என்ற கொடிய வியாதி அடியோடு நீங்கிவிடும்.

மா-அருணாசலமுதலியார், பொன்மலை.

## நாய் கடிக்கு ஓர் நல்ல மருந்து.

நாய் கடித்துப் பல்பதிந்த இடத்தில் பாகற்செடி இலையை நன்றாய்க் கசக்கிப் பிழிந்து ஒவ்வொரு பல்பதிந்த இடத்திலும் ஊற்றிப் பல் ஒன்றுக்கு ஒரு தம்பிடிவீதம் வைத்துத் துட்டின்மீது மஞ்சளை அரைத்து வைத்து, பாகல் இலையில் பிழிந்த சக்கையையே துட்டின்மீது வைத்துத் துணியால் கட்டிவிடவும். மூன்றுநாளைக்கு அதில் தண்ணீர் படக்கூடாது. மூன்றாவதுநாள் துட்டை அவிழ்த்து ஆற்றிலோ அல்லது கிணற்றிலோ போட்டுவிடவும். எந்தநாய் கடித்தாலும்சரி குணமாகிவிடும்.

## பகவத்கீதை வசனம்.

(252-ம் பக்கத் தொடர்ச்சி.)

கருத்திதுவாம்:—தூலதேகத்தை புலகாயதன் ஆன்மவடிவமாய்க் கொண்டானேனும், வேறு நூலுணர்ந்தவர் அனான்மாவாகவே நிச்சயித்துள்ளார். அத்தகையதைக் கர்த்தாவில் திருஷ்டாந்தமாகக் காட்டியபோது தார்க்கிகன் ஆன்மரூபமாய்க் கவர்ந்த கர்த்தாவில் அநான்மரூபத்தன்மை நிச்சயம் மிகவும் எளிதென்பதாம். அபஞ்சீகிருதபூதங்களினின்று முண்டாய சப்தாதிவிடயத் தோற்றத்தின் சாதனரூபச் செவியாதிபுலன்கள் கரணங்களாம். அவை தனித்தனியாம் ஞானேந்திரியம், கருமேந்திரியம், மனம், புத்தியென நாலுவாம். நூலில் மனாதி நான்கையே அந்தக்கரணபேதத்தானே அறைந்திருந்தபோதினும் கரணவர்க்கத்திலிருக்கும் மனம் புத்தி யிரண்டும் அகங்கார விருத்தி விசேடமாகக் கொள்க. அவ்விருத்திகளோடுகூடிய அந்தக்கரணரூப அகங்காரமோ கேவலம் கருத்தாரூபமேயாம்; கரணரூபமல்லவாம். சேதன ஆபாசமோ எவ்விடத்தும் சமமேயாம். அந்தக்கரணரூப அகங்காரத்திற் கருத்தாத்தன்மை சுருதிகளில் வெட்டவெளியாம். சரீரரூப அதிஷ்டானம் அகங்காரரூப அதிஷ்டானம் அகங்காரரூபகருத்தா அனான்மரூபமும் பௌதிகமும் கற்பிதமும் ஆவதேபோல இப்பன்னிரண்டுவகைக் கரணமும் ஆம். கிரியாசக்திப் பிரதானமாகிய அபஞ்சீகிருதங்களின் காரியரூபமும், கிரியைப் பிரதானத்தன்மைரூபத்

தாலும் வாயுவின் சம்பந்தித்தன்மை ரூபத்தாலும் கூறப்பெற்றதும் ஆகிய பிராணாதிசேஷ்டையாம்; நாநாவிதமாம். பிராணன் அபானன் வியானன் உதானன் சமானன் என ஐந்துவகையாம்; அல்லது நாகன் கூர்மன் கிருகலன் தேவதத்தன் தனஞ்சயன் என்னும் ஐந்தையுஞ்சேர்த்துப் பத்துவகையாம்; நாகாதியைந்தும் பிராணாதியி லடங்குவனவேயாம். ஆகலின் அநேக இடங்களில் ஐந்து பிராணனே கூறப்பெறும். அச்சேஷ்டை தனிப்பட்டு இடவேற்றுமையாலும் காரியபேதத்தாலும் பின்ன பின்னமாம். அறைந்த அதிஷ்டானம் கருத்தா கரணம் என்னும் மூன்றும் அனுன்மரூபமும் பௌதிகரூபமும் மாயாகற்பிதமும் ஆமாறு இச்சேஷ்டையுமாம். துயிலின்கண்ணே கருத்தாரூப அந்தக்கரண மிலயமாயினும் பிராணவியாபாரம் காணவரும், பல இடங்களில் பிராணன் அந்தக்கரணத்தினும் வேறாகவே கூறப்பெற் றிருக்கின்றதாதலின் இரண்டும் அத்தியந்தம் வேறென்பர் சிலர். கிரியாசத்தியையுடையதும் ஞானசக்தியையுடையதும் ஆகிய ஒரே அபஞ்சீகிருதகாரியஞ் சேதனத்தைச் சிவனுக்கு முபாதியாம். அவ்வொரே காரியம் கிரியாசக்தி முக்கியத்தாலே பிராணன் எனவும், ஞானசக்திப் பிரதானத்தாலே அந்தக்கரணமெனவும் பெறும். ஏனெனின், சுருதியில், உத்கிராந்தி (கிளம்புல்) திதியாதிகளின் உபாதித்தன்மை பிராணனிடத்திற் கூறப்பெற்றது. வேறு சுருதிகளில் அவ்வுத்கிராந்தி முதலியவற்றின் உபாதித்தன்மை அந்தக்கரணரூப உபாதியின்கண்ணே கூறப்பட்டது. இங்கு, பிராணன் அந்தக்கரணம் என்னும் இரண்போதிகட்கும் சுதந்திரமாகவே பேதமங்கீகரிக்கின் ஜீவான்மாவிற்கும் பேதவடைவாம். ஜீவபேதம் வேதாந்த சித்தாந்தத்தில் அங்கீகாரம் இன்றாமாதலின் அந்தக்கரணம் பிராணன் என்னும் இரண்டிற்கும் ஏகரூபமாகவே உத்கிராந்தியாதிகளின் உபாதித்தன்மை பொருத்தமாம். கூறிய பேதமோ அவற்றின் ஒருமையின் கண்ணும் கிரியாசக்தி ஞானசக்திகளின் பேதத்தானே சம்பவமாம். துயிலில் ஞானசக்திபாகம் இலயமாயினும் கிரியாசக்திபாகதரிசனமோ அவற்றின் ஏகபாவத்தின் கண்ணும் முரணாதாம். திருஷ்டி சிருஷ்டி இலயத்தில் சர்வ இலயமாயினும் பிராணவியாபாரமுடைய துயில்வோனது தேகம் அன்னியரானே இவன் துயில்கின்றான் எனக் கற்பிக்கப்படுகின்றது. ஆகையால், இருவகையாலும் பிராணன் அந்தக்கரணம் என்னுமிரண்டின் பேதம் கூறல் கூடியதேயாம். முன்மொழிந்த சரீரரூப அதிஷ்டான, அகங்காரரூபகத்தால் 12 வகையாய கரணம், பிராணாதிரூப சேஷ்டை என்னும் யாவற்றிற்கும் மேலாகமுறையே யனுக்கிரகம்செய்யும் தேவதைகள் தைவமெனப்படும் அது காரணவர்க்கத்தில் ஐந்தாவதாம். கூறிய அதிஷ்டானாதிகளைப்போலத் தைவமும் அனுன்மரூபமும் பௌதிகமும் மாயாகற்பிதமும் ஆம். ஆண்டுக்கருத்தா கரணம் சேஷ்டையென்னும் மூன்றினுக்கும் அதிஷ்டானமாகிய சரீரத்திற்கோ பிருதிவி தேவதையாம். ஏனெனின், சுருதியில், வாக்கு முதலியவற்றின் அதிஷ்டாதா அக்கினியாதிகளோடு சரீரத்தின் அதிஷ்டாதாரூபத்தானே பிருதிவி படிக்கப்பெற்றுளதாம், ஆகையால் இச்சுருதிப் பிரமாணத்தானே சரீரரூப அதிஷ்டானத்தின் தேவதை பிருதிவியேயெனத் துணியப் பெறும். கருத்தாரூப அகங்காரத்திற்கு ருத்ரதேவதையாம். இது புராணாதிகளிற் பிரசித்தமாம். இவ்வாறு சுரோத்திராதிகரணங்களின் தேவதையும் வெளிப்படையேயாம். செவி முதலியவற்றிற்கு முறையே, திக்குவாத அருக்க பிரசேதா அசுவினீ என்னும் ஐந்தும் தேவதைகளாம். வாக்காதி யைந்திற்கும் முறையே வன்னி இந்திரன் உபேந்திரன் மித்திரன் பிரஜாபதியென்னும் ஐவர் தேவதைகளாம். மனமதிகட்குச் சந்திரனும் பிரகஸ்பதியும் தேவதைகளாவார்கள். பிராணாதியைந்திற்கும் முறையே, சத்யோஜாத வாமதேவ அகோரதத்புருஷ ஈசானதேவதைகள் ஆவர்கள் என்பது புராணப்பிரசித்தமாம். இருரையில் தைவசப்தத்தானே தரும அதருமம் கவரப்பெற்றுள்ளது.



[பூர்வசுலோகத்தில் அவ்வதிஷ்டானாதி ஐந்துகாரணங்களின் சொரூபங்கூறி யருளப்பெற்றது. இப்போது இம்மூன்றாவது சுலோகத்தால் ஸ்ரீ பகவான் அவ்வைந்திலும் சருவகரும காரணத்தன்மையைக் கூறியருளுகின்றார்]

ஹே அருச்சுன! இப்புருடன் சரீரம் வாக்கு மனம் என்னும் மூன்றால் தருமத்தையேனும் அதருமத்தையேனும் ஆரம்பிப்பன்; அவ்வியாவற்றிற்கும் அதிஷ்டானாதி யைந்துமே காரணமாம்.

தேகத்தாலாயது வாக்காலாயது மனத்தாலாயது என விதிஷேதரூப மூன்றுவகையே கருமம் தருமசாஸ்திரத்திற் பிரசித்தமாம். அக்ஷபாத முனிவரும் மூவகையே கருமத்தைக் கூறியுள்ளாராதலின் பிரதானத்திற் கருத்தைவைத்து ஸ்ரீபகவான் கூறியுள்ளார். அதிகாரியானவன் சரீரத்தாலேனும் வாக்காலேனும் மனத்தாலேனும் நியாயரூபகருமத்தையேனும், விபரீதரூப கருமத்தையேனும் தொடங்குவன். எல்லாக் கருமங்கட்குமே உரைத்த ஐந்துமே காரணமாம். சுருதி மிருதிரூப சாஸ்திரத்தில் விதிக்கப்பட்ட அக்கினிஹோத்திராதிதருமம் நியாயமாம். அவற்றானே நிஷேதிக்கப்பட்ட ஹிம்சாதியதருமம் விபரீதமாம். ஜீவனஹேதுபூதமாகிய உச்வாசம் நிச்வாசம் நிமேஷம் உன்மேஷம் க்ஷுதம் ஜிரும்பணம் என்பதாதி இயற்கையாய கருமங்களும் பிறவும் ஆகிய விதிநிஷேதசருவகருமங்களும் தரும அதருமங்களின் காரியரூபங்களேயாமாதலின் அவையாவுமே நியாயம் அநியாயம் என்னு மிரண்டிலே யடங்கும். ஆகையால், ஸ்ரீபகவான் திருவாக்கிற் குறையுண்டாகாதாம். சாத்திரத்திற்கும் சாத்திரத்திற்கூறிய கருமத்திற்கும் மநுடனே அதிகாரி; இப்பொருளை புணர்த்தும்பொருட்டு ஸ்ரீபகவான் மநுடவாசகர: என்னும் சப்தத்தைக்கூறி யருளினர். இருரையிலோ இச்சுலோகத்திற்கு இப்பொருள் இயம்பப்பெற்றுளது:—சரீராதிகளானே தொடங்கப்பெற்ற கருமம் என்னும் வசனத்தானே பின்னர் அச்சருவகருமங்களின் அதிஷ்டானாதி ஐந்துகாரணமாம் எனக் கூறன்மிகமுரணும். சண்டுச்சரீரம் என்னும் பதத்தானே அதிஷ்டானத்தைக்கவர்க; ந: என்பதானே கருத்தாவைக்கொள்க; வாங்மந: என்றதானே கரணங்கவர்க; ப்ராரபதே என்னும் பதத்தானே சேஷ்டையைக் கவர்க. ந்யாய்யம்வா விபரீதம்வா என்னும் வசனத்தானே தரும அதருமரூப தைவத்தைக் கொள்க. சருவகருமங்களினும் அதிஷ்டானாதியைந்து காரணங்களின் உபயோகம் சமானமேயாம். இவ்வைந்துமிலாது எக்கருமமும் துணியப் பெறுதாமாயினும் சுருதியாதிகளில் விதிநிஷேதரூப சாரீரவாசிகமானசிகம் என்னும் மூவகையே கருமம் பிரசித்தமாம் ஆகலின் இது சாரீரம் என்பதாதியாகக் கூறல் அவ்வத்தேகாதிகளின் பிரதானத்தன்மையை யபேக்ஷித்தாமன்றி யக்கூற்று அச்சரீராதி கருமங்களில் அதிஷ்டானாதிகளின் ஹேதுதையை நீக்கமாட்டாதாம் என்றறிக; ஆகையால், சிறிது மாத்திரையும் சண்டு முரண் இன்றாம்.

(தொடரும்.) சிடன்.

# அம்பாலிகை அல்லது அதிசய மரணம்

(254-ம் பக்கத் தொடர்ச்சி.)

அம்மாது அதாவது அமிர்தம்மாள் "கூடாது; இவன் இங்கே ஒரு பொட்டு ஜலம்கூட அருந்தலாகாது. இவன் மிக்க அதிகப்பிரசங்கியாகிய நாடோடிக் கள்ளப்பயல்" என்றாள்.

ஆனந்தஸிங் தண்ணீர்க்குழாயைநோக்கி இரண்டடி நெருங்கினான்.

அதைக்கண்ட அம்மாது மிக்க கோபமடைந்து நாயை யவன்மேல் ஏவிவிட்டாள்.

அந்த நாய் புலியைப்போல் பாய்ந்து ஆனந்தஸிங்மேல் விழவந்தது. அவன் சட்டென்று ஒருபக்கம் விலகிக் காலால் ஓங்கி நாய்மேல் ஒரு உதை விட்டான். அந்த நாய் வாள் வாள் என்று வீறிட்டுக்கொண்டே தரையில் புரண்டுவிட்டது. அம்மாது ஆச்சரியமடைந்து நின்றாள். புரண்டெழுந்த நாய் முன்னிலும் மிக்க உக்கிரத்தோடு அவன்மேல் பாய்ந்தது. மறுபடி அவன்விட்ட உதையால் புரண்டெழுந்து இவனிடம் நமது ஜபம் பலிக்காதென்று கண்டுகொண்டு அசந்து நின்றுவிட்டது. ஆனந்தஸிங் அதை, நோக்கிச் சென்றபோது அந்த நாய் தன்வாலை இரண்டு கால்களுக்குள்ளும் விட்டுக்கொண்டு கொய் கொய் என்று சத்தமிட்டுக்கொண்டே பதுங்கி யோடிவிட்டது.

ஆனந்தஸிங் மறுபடி தண்ணீர்க்குழா யருகிற் செல்ல முயன்றபோது ஆச்சரியமான ஒரு சம்பவம் நேர்ந்தது. அதாவது அமிர்தம்மாள் தன் கரத்தில் ஒரு கைத்துப்பாக்கியைப் பிடித்து நீட்டிக்கொண்டு "அடே நாடோடி! என் நாயை மிரட்டிவிட்டாய். என்னை மிரட்டு பார்ப்போம். இதோபார் ஒரு அடி முன்னுக்குவைத்தாயோ உடனே சுட்டுவிடுவேன்." என்றாள்.

ஆனந்தஸிங் திடுக்கிட்டு அம்மாதின் துணிகரத்தைக்கண்டு மிக்க வியப்படைந்தான். தன்போல் ஆடவனாயிருந்தால் தன் துப்பாக்கியை யெடுத்துக்கொண்டு சமப்போருக்கு நிற்பான். பெண்பிள்ளையா யிருப்பதால் அவளைநோக்கி "நீ பெண்பிள்ளையாயிருக்கிறாய். நான் நாடோடியாயிருந்தாலும் ஸ்திரீகள்மேல் கைநீட்டுகிறவனல்ல. ஆனவரையில் தாகத்திற்குக் கேட்டவனைக் கொல்ல வருகிறாயே புண்ணியவதிதான்" என்று வெறுப்போடு கூறிவிட்டு "நான்போய் வருகிறேன்" என்று திரும்பினான்.

அப்போது அம்மாது "உனக்குப் பசியாகவும் தாகமாகவும் இருப்பது உண்மைதானா?" வென்றாள். ஆனந்தஸிங் ஆம் என்றான்.

அம்மாது:—"அப்படியானால் இந்தவிடத்திலேயே நில். நான்போய் ஆகாரமும் பானமும் கொண்டு வருகிறேன்" என்றாள்.

ஆனந்:—"மிக்க வந்தனம். அப்படியே இங்கேயே நிற்கிறேன்." என்றான்.



அம்மாது "பத்திரம் ஒரு அடி அப்புறம் எடுத்துவைத்தாயோ பத்திரம். நாடோடிகூட பசியோடாவது தாகத்தோடாவது என் வீட்டிலிருந்து செல்லக்கூடாது" என்று கூறிவிட்டு வீட்டிற்குள் சென்றாள்.

---

## 13-வது அத்தியாயம்.

அம்மாது சென்ற உடனே ஆனந்தஸிங் முழங்காலிட்டு அங்கிருந்த புதருக்குள் நகர்ந்து செடிகளுக்கிடையில் நுழைந்து தாழ்வாரத்தருகிலிருக்கும் ஓரம் வரையில் சென்றான். முன் சத்தமிட்ட அந்த ஸ்திரீ யாரென்று பார்க்கவேண்டுமென்பதே அவன் எண்ணம். செடிகளினிடை வழியாய்த் தாழ்வாரத்தை நோக்கியபோது அங்கு தீபங்கள் மிக்க சோதியாய்ப் பிரகாசித்துக்கொண்டிருப்பதையும், அச்சோதியின் மத்தியில் ஒரு மிக்க அழகிய கன்னிகை நின்றிருப்பதையும் கண்டான். அவள் முகத்தை யொருவிநாடி உற்றுப்பார்த்ததும் அவனுக்குச் சொல்லொணா வியப்பும் சந்தோஷமும் உண்டாய்விட்டன. தான் பின்பற்றிவந்தது சரியானவழியே யென்றும் தெரிந்துவிட்டது.

ஏனெனில் யாவரும் இறந்து போய்விட்டாள் என்று கருதும் அம்பாலிகைதான் அங்கு நிற்கிறவள். அவள் சவம்போல் பெட்டியிலிருந்தபோதே அவளுடைய வனப்பு அவனுக்கு ஆச்சரியத்தை யுண்டாக்கியது. இப்போது பூரணசுகத்தோடும் சந்தோஷத்தோடும் உல்லாசமாய் நிற்கும் அவளுடைய முகாரவிந்தமானது அவனை மதிமயங்கச்செய்தது. அதனால் அவன் தன்னை யறியாமல் தலையைச்சற்று செடிகளுக்கு வெளியில் நீட்டிவிட்டான். அதேசமயம் நாம் அவள் கண்களுக்குப் புலப்பட்டுவிட்டோம் என்று தெரிந்துகொண்டான். ஆனந்தஸிங் சமயோசிதமான யோசனையுடையவன் ஆகையால் அக்கன்னிகை அலறிக் கூச்சலிடுவதற்குள் அவன் துள்ளியெழுந்து தாழ்வாரத்தருகிலோடி, அப்பெண்ணைநோக்கி "பயப்படாதே; நான் உனக்குக் கெடுதிசெய்யமாட்டேன். உனக்குச் சமாசாரம் கொண்டுவந்திருக்கிறேன்" என்றான்.

அப்பெண் சட்டென்று கூச்சலிடமுயன்றதை நிறுத்தி "யாரிடமிருந்து?" என்றாள். ஆனந்தஸிங் சட்டென்று "பவானியிடமிருந்து" என்றான்.

அச்சமயம் அம்பாலிகை மறுபடி வாய்திறக்குமுன் தாழ்வாரத்தின் வழியாய் ஒரு வெள்ளை புருவம் ஓடிவருவதுபோலிருந்ததும் டமீல் என்று வெடிச்சத்தம் கேட்டது. துப்பாக்கிக்குண்டு ஆனந்தஸிங் தலைக்குமேல் பறந்தது. யாரோ வீறிட்ட சத்தம் கேட்டது. மறுவிநாடி நிச்சப்தமாய் விட்டது. ஆனந்தஸிங் சட்டென்று தரையில் உட்கார்ந்து செடிகளில் நுழைந்து மாயமாய்ப் போய்விட்டான். அந்த வெள்ளைபுருவம் மறைந்துவிட்டது. இரண்டுபேரும் ஒருவரையொருவர் நோக்கிப் பயத்தோடு விழிக்கலானார்கள்.

அமிர்தம்மாள் அம்பாலிகையைநோக்கி, 'உள்ளே வா' வென்றாள். அவள் அதற்கு மறுத்துக்கூறாமல் அவ்வாறே சென்றாள். அச்சமயம் ஒரு வேலைக்காரி சமையலறையிலிருந்து பயத்தோடு ஓடிவந்தாள். அமிர்தம்மாள் அவளைநோக்கி "சாளரத்தை யடியோடு மூடு" என்றாள். அப்பெண் அப்படியே மூடிவிட்டு, "என்ன சங்கதியம்மா?" என்று வினவினாள். அம்மாது "யாரோ ஒரு அநாதிநாடோடி வீட்டிற்குள் நுழைய முயன்றான்." என்றாள்.

சாளரங்களெல்லாம் மூடப்பட்டன. அச்சமயம் ஒருமனிதன் தாழ்வாரத்தில் வந்துநின்றான்.

வேலைக்காரன் அலறிக் கீழேவிழுந்துவிட்டான். அமிர்தம்மாள் வீரத்தோடு கையில் துப்பாக்கியைப் பிடித்துக்கொண்டு சாளரத்தருகிற்சென்று அங்கிருந்த ஆளைக்கண்டதே.

"ஆ! கடவுளே, இவன் சாம்பனே" என்று சாளரத்தைத்திறந்து அவனையுள்ளே யழைத்துக்கொண்டாள். சாம்பன் என்ற வேலைக்காரன் மிக்க பலசாலி. சிங்கத்தைப்போல் தைரியமும் தேகபலமும் உடையவன். தன் எஜமானியை நோக்கி "அம்மா! சங்கதியென்ன?" வென்றான்.

அமிர்தம்மாள்:—"யாரோ ஒரு நாடோடி வீட்டிற்குள் நுழைய முயன்றான் நான் சுட்டேன். அவன் ஓடிவிட்டான்" என்றாள்.

சாம்பன் "அவன் ஒருதிக்கில் சென்றான்" என்றான். எஜமானி "அவன் தெருவாசற்படி வழியாய்த்தான் ஓடினான். எங்காவது பதுங்கிக் கொண்டிருக்கிறான் பார்!" என்றாள்.

சாம்பன்:—"அவன் எங்கு ஒளிந்துகொண்டிருந்தாலும் ஒருநொடியில் பிடித்துவிடுகிறேன்" என்று புறப்பட்டான்.

அவன் வீட்டைக்கடந்து பாதையில் திரும்பும்போது ஒருவன் வீட்டின் குதிரைலாயத்தின் பக்கமாயிருக்கும் வழியைநோக்கி வருவதைக்கண்டான். ஆத்திரத்தால் வருபவன் எம்மாதிரி மனிதனென்று கவனிக்காமலே, "ஆ! கள்ளப்பயலே! அகப்பட்டாயா" என்று ஒரேபாய்ச்சலாய்ப்பாய்ந்து அவன் தொண்டையைப் பிடிக்கப்போனான்.

மறுநிமிடம் சாம்பன் பாதையில் கடகடவென்று உருண்டான். அதனால் மிக்க கோபமடைந்து குதித்தெழுந்து மறுபடி அவன்மேல் பாய்ந்தான். இம்முறை பாதையின் மறுபக்கமிருக்கும் அகழில் தூக்கியெறியப்பட்டான். அவனுக்கு அம்மனிதன் பலத்தைக்கண்டு மிக்க வியப்புண்டாயினும் அகழியிலிருந்து புரண்டெழுந்துவந்து "அடே" யென்று மறுபடி அவன்மேல் பாய்ந்தான். இம்முறை யம்மனிதன் இவனை யொரு குழந்தைபோல் தலைக்குமேல் தூக்கி வீட்டைச்சுற்றியிருக்கும் வேலிக்கு அப்பால் எறிந்தான். அந்தவிடத்தில் அன்னங்கள் விளையாடுவதற்காக ஒருபெரிய குட்டையிருந்தது. சாம்பன் அக்குட்டையில் விழுந்தான். பாபம் அவனுக்கு நீந்தத்தெரியாது. அக்குட்டையில் 5 அடிஜலமேயிருந்தது. ஆகை



யால் அதில் நின்றுகொண்டு கோவென்று கூச்சலிடத்தொடங்கினான். வந்த மனிதனும் வேலியைத்தாண்டிக் குட்டையின் ஓரத்தில் வந்து நின்றான்.

(தொடரும்.)

ஆரணி-குப்புசாமி முதலியார்.

---

## பொது சமாச்சாரங்கள்.

### ஆர். கிருஷ்ணராவ் போன்ஸ்லே அவர்களுக்கு ராவ்பகதூர் பட்டம்.

திருவாளர்-ஆர். கிருஷ்ணராவ் போன்ஸ்லே:—(Secretary to the Commissioner for Government Examinations, Member of the Senate & of the Academic Council of the University of Madras, Joint Secretary to the South Indian Research Conference, Secretary to the Vernacular Scientific Terms Committee, Madras, Member of the Organising and Literary Committees of the All-India Oriental Conference, Madras, Etc.)

அவர்களுக்கு நம் ஆட்சியாளரால் முன் ராவ்சாஹேப் பட்டம் கொடுக்கப்பட்டிருந்தது. இதுவரை அவர்கள் உத்தியோக முறையிலும், வேறு பல நற்றுறைகளிலும் காட்டிவந்த பல திறங்களை நன்கு மதித்து இப்போது ஆட்சியாளர் இம்மதி நுட்பமுடையார்க்கு ராவ்பஹதூர் பட்டம் நல்கியிருக்கின்றனர். இந்நிகழ்ச்சி நம் நாட்டவரெல்லோருக்கும் மிக்க திருப்தியைத் தரக்கூடியதாதலின், நாம் இதுபற்றி அளவிலா ஆனந்தத்தை அடைவதோடு, மற்ற எல்லோருமே சந்தோஷங் கொண்டாடுவார்களென்று நம்புகிறோம். கனமிக்க போன்ஸ்லே அவர்கள் வித்யா விஷயமாகவும், வேறு பொது நன்மையான விஷயமாகவும் நம்மவர்க்குச் செய்துவரும் பேருதவியும், நலங்களும் மிகப் பாராட்டத்தக்கன. இத்தகைய மகோபகாரிக்கு எல்லாம்வல்ல இறைவன் நிறைந்த ஆயுளும், சிறந்த செல்வமும் நல்கி என்றென்றும் இன்னருள் புரிவாராக.

* * * * *

புதிய விமானம்:—ரோ' என்னும் விமானகர்த்தா புதிய விமானம் ஒன்றை ஆக்கி வருகிறார். இதுவரை உலகில் உள்ள விமானங்களின் வேகத்தைக்காட்டிலும் அதிக வேகமுள்ளதாக விருக்கும் என்று விமானம் செய்பவர் கூறுகிறார். மணிக்கு 180 மைலும் செல்லலாம் என்றும் கூறுகிறார். இது முழுதும் முடிந்தவுடன் பரிட்சை செய்யப்படும். திருப்திகரமாயிருப்பின் ராயல் விமான படைக்கு இது விற்கப்படும். இதற்குப் பெயர் 'பறக்கும் குண்டு' என்று சூட்டப்பட்டிருக்கிறது.

* * * *

ஒரு கிழவனாரின் இரண்டாந்தாரம்:—இந்தியாவிலே ரமணமால் ராகமலானி என்னும் ஐம்பத்தைந்து வயதுள்ள மணமகன் ஒருவர் ஹைதராபாட் என்னும் இடத்துக்குச் சமீபமாயுள்ள ஜொஸ்றி என்னுமிடத்தில் வசிக்கும் எட்டுவயதுப் பெண்குழந்தையை இரண்டாம் தாரமாக விவாகம் செய்திருக்கின்றனர். இச்சிறுமியைத் தமது இல்வாழ்க்கைத் துணைவியாக்கற்பொருட்டுக் குறித்த கிழவனார் ஆறாயிரம் ரூபாவரையில் செலவு செய்தனர். அத்தொகையுள் மூவாயிரம் ரூபா மணமகளின் தந்தைக்குக் கிடைத்தது. எஞ்சிய பணம் இப்புதிய விபரீத தம்பதிகளை இணைத்தலில் ஈடுபட்டுழைத்த ஒரு தரகருக்குக் கிடைத்ததாம். (இந்துசாதனம்.)

## "ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்.

குரோதன வருஷம் மாசிமீ—கலியுகாதி 5027, சாலிவாகனம் 1848,
பசலி 1885—கோல்லமாண்டு 1100-1101—ஹிஜரி 1844,
இங்கிலீஷ் 1926ளு பிப்ரவரிமீ—1926ளு மார்ச்சுமீ

| மாசி | பிப்ர வரி | வாரம். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 12 | வெ | ● 40-88 | திரு12-8 | ம12-8சி | கும்பரவி-நா-5-88-சந்திர அமாவாசை |
| 2 | 13 | சனி | பிர31-18 | அவி4-43<br>சதை57-10 | சி4-48அ | |
| 3 | 14 | ஞா | துதி22-18 | பூரட்50-88 | சி50-38அ | |
| 4 | 15 | திங் | திரி14-48 | உத்45-8 | சித்60 | சூரி 2உ கும்-புத 18 ,, மீன-பு 27 ,, மிது-ரா |
| 5 | 16 | செவ் | சது7-48 | ரேவ41-10 | சித்60 | குரு கே தனு-கேது |
| 6 | 17 | புத | பஞ் 2-50<br>சஷ்59-50 | அசு39-0 | ம39-0சி | சு-பு 29உ மக-செ |
| 7 | 18 | வியா | சப்58-45 | பர88-55 | சி88-55ம | |
| 8 | 19 | வெ | அஷ்59-55 | கி.×.-40-58 | சி40-58ம | செ சனி |
| 9 | 20 | சனி | நவ60 | ரோ44-45 | அ44-45ம | |
| 10 | 21 | ஞா | நவ2-55 | மிரு50-20 | சித்60 | உபாயனம்செய்ய |
| 11 | 22 | திங் | தச7-38 | திரு57-8 | சி57-8அ | க்ஷிரக்க |
| 12 | 28 | செவ் | ஏ13-28 | புன60- | சித்60 | மத்வ சர்வ ஏகாதசி |
| 13 | 24 | புத | து19-58 | புன4-38 | சித்60 | பிரதோஷம் |
| 14 | 25 | வியா | திர26-43 | பூச12-30 | அ12-30சி | சீமந்தம், பும்சவனம் |
| 15 | 26 | வெ | சது33-28 | ஆயி20-18 | மர60 | கவசிரசதிசெய்ய |
| 16 | 27 | சனி | ○ 39-38 | மகம்27-50 | அ27-50சி | பௌர்ணமி, மாசிமகம், ஹோலிபண்டிகை, |
| 17 | 28 | ஞா | பிர45-10 | பூரம்34-40 | சி34-40அ | க்ஷிரக் [ண |
| 18 | 1 | திங் | து49-58 | உத்40-53 | சித்60 | வியாதியஸ்தர் மருந்துண் |
| 19 | 2 | செவ் | திரி53-58 | அஸ்46-15 | சித்60 | [த்திரை விலக்க |
| 20 | 3 | புத | சது56-45 | சித்50-38 | சித்60 | வியாதியஸ்தர்குளிக்க, யா |
| 21 | 4 | வியா | பஞ்58-30 | சுவா53-55 | அ53-55சி | ரங்கபஞ்சமி, விவாகம் |
| 22 | 5 | வெ | சஷ்58-58 | விசா56-0 | சித்60 | மாங்கல்ய, க்ஷிரக்க |
| 23 | 6 | சனி | சப்58-5 | அனு56-45 | சித்60 | க்ஷிரக்க, தானியம் களஞ்சியத்தில் வைக்க |
| 24 | 7 | ஞா | அஷ்55-38 | கேட்56-8 | ம56-8அ | பிரயாணம் விலக்க |
| 25 | 8 | திங் | நவ51-48 | மூலம்53-50 | சி53-50ம | வியாதியஸ்தர் குளிக்க |
| 26 | 9 | செவ் | தச46-30 | பூரா50-15 | சி50-15அ | பிரயாணம் விலக்க |
| 27 | 10 | புத | ஏ39-55 | உத்45-28 | அ45-28சி | மத்வ சர்வ ஏகாதசி [ய |
| 28 | [illegible] | [illegible] | து32-18 | [illegible]28 | சித்60 | பிரதோஷம், யாத்திரைசெ |
| 29 | [illegible] | [illegible] | திர23-58 | [illegible] | சித்60 | மாசிவராத்திரி |
| 30 | 13 | சனி | ச● 15-3 | சதை25-55 | அ25-55ம | மீனரவி நா-58-20, சந்திர அமாவாசை, |

(Side column, vertical: மார்ச்சு 1926ளு)

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR AT THE "ANANDA BODHINI" POWER PRESS, 1[illegible] VENKATESA MAISTRY ST., MADRAS.

சென்னை 600 006

# ஸ்ரீமத் கம்பராமாயண

## வசன சங்கிரகம். (மூன்றாம் பதிப்பு.)

(சப்தகாண்டங்கள் அடங்கியது.)

ஸ்ரீ இராமர் பட்டாபிஷேகம் ஹாப்டோன் படம் ஹார்ட்பேப்பரில் போட்டு உள்ளே சேர்க்கப்பட்டிருப்பதோடு, மேல் காலிகோ பைண்டு முன் பக்கத்திலும் டை படம் மிக அழகாகப் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது

மிக்க திருத்தங்களோடு உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது. விலை ரூபா 2.



இதன் முதல் இரண்டு பதிப்புகளும் மிக விரைவில் செலவாகி விட்டபடியால் இம்மூன்றாம் பதிப்பு இப்போது வெளிவந்துள்ளது. இப்பதிப்பிலும் சொற்பக் காப்பிகளே அச்சிடப்பட்டிருக்கின்றன. ஆதலின் இப்பதிப்பு புஸ்தகம் வேண்டியவர்கள் முன்னரே எழுதிப்பெற்றுக்கொள்க. ஸ்ரீ இராமபிரான் சரிதையை விரித்துக் கூறும் இந்த இராமாயணமானது மிக்க புண்ணிய கதை யென்பது உலகறிந்த விஷயம். இதனைப் பாராயணஞ் செய்வோர்களடையும் பயன்கள் அளவிடற்கரியனவாம். இதனைப் பக்தி சிரத்தையுடன் படிப்பவர்க்கு உலகத்தில் விரும்பக்கூடிய பொருள்களெல்லாம் கைகூடும்; உயர்ந்த அறிவுண்டாகும்; கீர்த்தி அதிகரிக்கும்; மோக்ஷத்தை அடையும் மார்க்கம் ஏற்படும்; இஹபரமும் உண்டாகும். இன்னும் இவையுண்டாகுமென்பதை,

"நாடிய பொருள்கை கூடும் ஞானமும் புகழு முண்டாம்
வீடியல் வழிய தாக்கும் வேரியங் கமலை நோக்கும்
நீடிய வரக்கர் சேனை நீறுபட் டழிய வாகை
சூடிய சிலை யிராமன் றோள்வலி கூறுவோர்க்கே"

என்னும் பாடலால் தெரிந்துகொள்ளலாம். இன்னும் இதனைப் படிப்பதன் மூலம் ராம என்ற நாமம் அடிக்கடி நாவில் வருவதனால், அதனைச் சொல்வார்க்கு நன்மையும் செல்வமுமுண்டாகும்; தீமையும் பாவமும் தொலைந்து ஜனனமரணங்கள் நீங்கிவிடும். இவ்விஷயத்தை,

"நன்மையுஞ் செல்வமு நாளு நல்குமே
தின்மையும் பாவமுஞ் சிதைந்து தேயுமே
சென்மமு மரணமு மின்றித் தீருமே
இம்மையே ராமவென் றிரண் டெழுத்தினால்"

என்னும் செய்யுளால் உணரலாம். இன்னும் இந்த இராமகதையை சமஸ்கிருதத்திலாவது, தமிழிலாவது, தெலுங்கிலாவது, கன்னடத்திலாவது, வேறு பாஷைகளிலாவது படிக்கக்கேட்பவர்களும் பிறந்த பலனை இக்ஷணத்தே அனுபவிப்பார்கள்; இதில்,

ஆனந்த

# ஆங்கில பாஷா போதினி.

(தமிழ் தெரிந்தவர்கள் அதி
சீக்கிரத்தில் ஆங்கிலம் கற்றுக்
கொள்ளலாம், ஆசிரியர்
தேவையில்லை, பணச்செலவு
அதிகமில்லை. இதற்குமுன்
பல ஆங்கில போதினிகள்
வெளிவந்திருப்பினும் அவை
இதற் கிணையாகமாட்டா.)
சொற்பப் பிரதிகளே
அச்சிடப்பட் டிருக்கின்
றமையால் ஆர்டருக்கு
முந்துங்கள்.




இது, இங்கிலீஷ் பாஷையை எவர்க்கும் எளிதில் போதிக்கும் அரியநூல். இதுவரை வெளிவராத நூதன பாடமுறைகளுடன் வெளியிடப்பட்டிருக்கிறது. இதனைப் படிப்பவர் எந்த ஆசிரியருடைய உதவியுமின்றிச் சில தினங்களில் ஆங்கிலபாஷையில் தேர்ச்சியடைந்து நன்றாகப் பேசவும், படிக்கவும் தெரிந்துகொள்ளலாம். கிராம முன்சீப்களுக்கும், மணியக்காரர், கர்ணம் முதலிய கிராம உத்தியோகஸ்தர்களுக்கும், பட்லர்களுக்கும், சிலோன் பினாங், சிங்கப்பூர் முதலிய இடங்களிலுள்ள தோட்டங்களின் கங்காணிமார்களுக்கும், இங்கிலீஷ் தெரிந்துகொள்ள விரும்பும் மற்ற எல்லோருக்கும் இது மிக்க அவசியமான புத்தகம்.

இதன் விலை ரூபா 2.
தபாற்கூலி பிரத்தியேகம்.

# கைவல்ய நவநீதவசனம்

விலை ரூபா 1—8—0

எமது விலாசம்:—"ஆனந்தபோதினி ஆபீஸ்,"
தபாற்பெட்டி நெ. 167, மதராஸ்.

## இந்திரியமையாத சங்க பலத்தைத் தருவதேது?




முறையாய்ச் செய்த அயக்காந்த செந்தூரத்தைக் காட்டிலும், தேகபலத்தைத் தரும் ஔடதம் வேறொன்றுமில்லை.

விளம்பரம்.

இதைக் கண்ணுறும் கனவான்களே!

இந்த லேகிய செந்தூரமானது சாமான்யமானதன்று, அபாரமான சத்துவத்தைத் தரக்கூடிய சக்தி அமைந்துள்ளது. உறுதியாய் இதை நம்பி வாங்கி சாப்பிட்டால் ஒரேதடவையிலேயே எமது மருந்தின் விசேடகுணம் நன்கு விளங்கும்.

# இந்த லேகிய செந்தூரத்தால்
# நிவர்த்தியாகும் முக்கிய வியாதிகளாவன

தற்காலத்தில் பல்ம இச்சையாலும், இரத்தப் பெருக்காலும் உண்டான 20 வகை மேகரோகங்கள், குஷ்டரோகம், குன்மரோகம், பித்தபாண்டு, கைகால்முடக்கு, ஓய்வாய்வு, பித்தசப்பம், நெஞ்சுதொண்டை எரிச்சல், வயிறு உப்பிசம், அஜீரணம், பசியில்லாமை, தாதுநஷ்டம், தேகஉளைச்சல், கண்ணில் நீர்வடிதல், சோம்பல், நித்திரையில்லாமை, தலைசுழற்றல், நீர் இறங்கும்போது பொறுக்கமுடியாத பாதையைத்தரும் நீர்மேகம் முதலியவைகளை ஆச்சரியப்படத்தக்கவிதமாய் நீக்கிவிடும். பலக்ஷாமான மேக சம்பந்தமான வியாதிகளைப் பத்தே வேளையில் முழுதும் குணமாக்கி சகல நரம்புகளுக்கு முறுக்கேற்றி அபரிமிதமான ரத்தவிர்த்தியைப் பெருக்கி சக்தியைத் தருவதில் இதற்கு மிஞ்சின லேகியமேனும் வேறொன்றில்லை என்று நாம் உறுதியாகச் சொல்லுவோம். இதல்லாமல் தேகத்தைப் புஷ்டியாக்கி தேகதடிப்பு, நகக்கண்வெளுத்திருத்தல் முதலிய வியாதியைக் கண்டித்து, தினந்தோறும் மலத்தைத் தாராளமாய்ப் போக்குவதில் இந்த லேகிய செந்தூரமே முதன்மையானதென்பதை எமது அநுபவத்தில் கண்டிருக்கிறோம். மிக, இந்த லேகிய செந்தூரமானது மேற்கண்டவியாதிகளைக் கண்டிப்பாய் நிவர்த்திக்குமா என்னும் சந்தேகமுடையோர் பரீக்ஷார்த்தமாக முதலில் 48-நாளாவது வாங்கி புசித்தால் இதன் அபார குணம் தெரியவரும். தவிர யாங்கள் இம்மகத்துவம் பொருந்திய லேகிய செந்தூரத்தை எவ்வளவு சிறப்பித்துக் கூறியபோதிலும், மேலும் இதை நோயுள்ளவரேதான் சாப்பிடவேண்டும் என்று அவசியமில்லை; யாவரும் சாப்பிடலாம். நோய் உள்ளவர்களைவிட நோய் இல்லாதவர்கள் எண்ணிக்கையாக 48-நாள் லேகிய செந்தூரத்தை யாதும் பத்தியமின்றி சாப்பிட நல்ல பலம் ஏற்படும். இது தவறு. தருவித்து எண்ணிக்கையாக சாப்பிட்டு 10-நாளைக்குள் குணம் தராவிடில் உடனே தெரியப்படுத்தினுல் கட்டாயம் வாங்கிய பணம் வாபஸ் செய்யப்படும். தவிர மேற்காட்டிய நோய் உடையோர் 48-நாள் சாப்பிட்டார்களேயானுல் முழுதும் குணமாகிவிடும். அப்படி குணம் தராவிடில் யாங்கள் உத்திரவாதிகளாவோம். அதாவது, யாங்கள் இவ்வளவு அருமையான லேகிய செந்தூரத்தை எவ்வளவோ சிரத்தையுடன் கஷ்டப்பட்டு முடித்து பரோபகாரார்த்தமாக இதை வெளியிட்டோம். இவ்வருமைவாய்ந்த லேகிய செந்தூரத்திற்குப் பொன்மெடல், வெள்ளிமெடல் பெற்றதல்லாமல் ஆயிரக்கணக்கான யோக்கியதா பத்திரங்கள் பெற்றிருக்கிறோம். நமது லேகிய செந்தூரமானது யாம் சொன்ன வரையில் குணத்தைக் கொடுக்கிறது என்றதைப்பற்றி ஜவாப்தாரியா யிருக்க காத்துக்கொண்டிருக்கிறோம், இது உண்மை. ஒரேதரம் தருவித்து பாரும்; எமது உண்மை நன்குப் விளங்கும்.

வாதாதிக்க தோஷத்தினுலாவது, துரப்பியாசத்தினுலாவது, அதிக மனக்கவலையினுலாவது, அடிக்கடி உண்டாகும் நோயினுலாவது, மற்றெந்தக் காரணத்தினுலாயினும் பலமிழந்தவர்கள் எண்ணிக்கையாக லே. லேகிய செந்தூரத்தை புசிப்பார்களானுல் தேகாரோக்கியம், வலிவு, அழகு முதலியவைகளைப் பெற்று அவர்களைச் சந்தோஷிக்கச்செய்யுமென்பதில் தடையில்லை. வெளியூர் கனவான்கள் இந்த லேகியத்தில் முழு நம்பிக்கை வைத்து ஒரே ஒருதரம் பரீக்ஷிப்பார்களானுல், அவர்கள் அவசியம் ஆனந்தமடைவார்கள்.

இந்த லேகிய செந்தூரத்திற்குப் பத்தியமேகிடையாது. எந்தப்பண்டமும் நீக்குதலின்றி மருந்துசாப்பிடுங்காலத்தில் வயிற்றிற்கு தாராளம்போல் சாப்பிடவேண்டியது. வெள்ளுல் பசி அதிகமாயேற்படும். பச்சைப்பயறு, மோர், தயிர், பால், நெய், சர்க்கரை, உப்பு, செம் இறைச்சி அதிகமாக தேகத்தை தணிக்கக்கூடிய விதமாய் தாராளம்! செய்யாமல் சாப்பிட்டு வரவேண்டியது. புளிக்குப்பேர்தக்காய் வகைராக்கள் சாப்பிடவேண்டும். தயிர், பால், நெய் முதலியவைகள், எருமைப்பால், பசும்பால் ஆட்டுப்பால் எதுவாயிருந்தாலும் சந்தேகமின்றி சாப்பிட்டு வரலாம்.

இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரத்தை மட்டும் ஒருவர் தருவித்து எண்ணிக்கையாக 48-நாள் சாப்பிடுவாரே யானுல் அது தேகத்தில் வறட்சி, தேகமெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கி தேகமானது சுத்த புதிய ரத்தம் பாய்ந்து தன் வாழ்நாள் பரியந்தம் இளைக்காமல் முற்றிலும் அக்னிப்போல் ஆஜானுபாகுவாய் விளங்குவர். இதைப் புருஷன் பெண்ஜாதி இருவரும் ஏககாலத்தில் ஒற்றுமையாய்ச் சாப்பிட்டு வந்தால் அவர்களுக்கு உதிக்கும் மக்கள் யாதொரு நோயுமில்லாதபடி ரொம்பவும் தேஜசாய்த் தோன்றுவார்கள். இது உண்மை. இதைப்பற்றி இன்னும் எழுத முடியாது. இந்தியா, பர்மா, சிலோன் ஆகிய உள் நாடுகளுக்கு 24-நாள் சாப்பிடக்கூடிய லேகியமும் செந்தூரமும் விலை ரூபா 1-12-0. போஸ்டேஜ் அணு 6. ஒரே தடவை 48-நாள் மருந்து வாங்குவோர்க்கு போஸ்டேஜ் உள்பட ரூபா 4.

பினங்கு, சிங்கப்பூர், செட்டாக் முதலிய அயல் நாடுகளுக்கு 24-நாள் சாப்பிடக்கூடிய மருந்து விலை ரூபா 1-12-0 தபாற்கூலி ரூபா 1—4—0 48-நாள் மருந்து வாங்குவோர்க்கு போஸ்டேஜ் உள்பட 5—8—0.
சிங்கபூர், பினங், மலாக்கா முதலிய வெளிநாடுகளுக்கு வி. பி. ஆர்டர் இருந்தாலும் முன்பணம் அனுப்பாதவர்களுக்கு மருந்து அனுப்பப்படமாட்டாது.

விலாசம்:—லேகியம் டிபோ,
தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

---

# சர்வதேள் விஷசஞ்சீவினி

(ரிஜிஸ்டர்ட் டிரேட் மார்க்)

பட்டவுடனே விஷம் பறக்கும்! அழுதவன் சிரிப்பான்!!
இதில் குணமில்லையென்று நிரூபிப்பவர்களுக்கு 100-ரூபாய் இனாம்.




நமது நாட்டிற்கு இது அவசியமாய் ஒவ்வொரு குடும்பத்திலும் சதா வைத்திருப்பாய் இருக்கவேண்டிய ஓர் ஔஷதமாகும். இது ஆயில்வேத பூஜனி தமிழ் வைத்திய நிபுணர்களால் நன்கு மதிக்கப்பட்டுள்ளது. காலப்பட வைப்பதால் குணம் சற்றும் குறையாது. தேள், நட்டுவாக்கிளி, செய்யான், பாம்பு, எலி முதலிய விஷங்களை இரண்டொரு நிமிஷங்களில் அடியோடு நீக்கக் கூடியது. எண்ணிறந்தோர் இதனுல் சுகமடைந்து பிரத்தியட்ச அநுபவமானதால் இதைப்பற்றி நாம் அதிகம் கூறவில்லை. இது இரண்டுவித மருந்துகளடங்கியது. உபயோகிக்கும் முறை மருந்தோடு அனுப்பப்படும்.

விலை:—இரண்டுவித மருந்தும் அடங்கிய பாக்கெட் 1-க்கு அணு 8. தபாற்கூலி அணு 4.

டஜன் 1-க்கு ரூ. 5 0 0 தபாற்கூலி இனாம். ஏககாலத்தில் 8-பாக்கெட் வாங்கினுல் வர்த்தகருக்கு 100-க்கு 25-கமிஷன் கொடுக்கப்படும்.

விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167

## சோடா வாட்டர் பவுடர்.

பித்த ரோகிகளுக்கும் ஜீரணசக்தி இல்லாதவர்களுக்கும் இது நல்லது. ஒரு ஆழாக்கு ஜலத்தில் 8-பொட்டிகை சோடாவாட்டர் பவுடர் போட்டால் சொரசொரவென்று பொங்கும். உடனே சாப்பிடவும் ஏப்பம் வரும். உடனே பித்தரோகமெல்லாம் நிறுத்தும். புட்டி 1-க்கு அணா 6.




## யூகலிப்டஸ் ஆயில்

(சுத்தமான நீலகிரித் தைலம்.)

வைத்தியத்தில் தேர்ந்த ஒரு அநேக வைத்தியரால் செய்யப்பட்ட இந்தத் தைலம் வாந்திபேதி, பிளேக் வியாதி, தேள் முதலிய விஷ ஜந்துக்களின் கடி, கத்தி வகையறு வெட்டு காயங்கள், நரம்பு சுளுக்குகள், தீப்புண்கள், வெந்நீர்பட்டு வெந்த புண்கள், பிளவைகள், புரைபோன ரணங்கள், இன்புளுவென்ஸா, மலேரியா, சகலவித சுரங்கள், இருமல், கக்குவா இருமல், வாய்வு, பிடிப்பு, குடைச்சல், வாய்வினால் உண்டாகும் கொடூரமான பல்வலி, தலைவலி, ஒற்றைத் தலைவலி, கண் எரிச்சல், கண் கட்டி முதலிய ரோகங்களுக்குக் கைகண்ட ஔஷதம்.

1 அவுன்ஸ்-புட்டி 1-க்கு அணா 4
1 „ 1-டஜன் (12) ரூ. 2 8 0

## நரைமயிர் கருக்குந் தைலம்.



தந்திரத்தில் பலவிதமாகச் செய்து விற்கப்பட்டு வரும் கப்புகள் மயிரைச் செம்பட்டையாகவும் பசுமைநிறமாகவும் சாம்பல் வர்ணமாகவும் ஆக்கி விகாரப்படுத்தி விடுகின்றன. நமது தைலமோ நரைத்த மயிருக்குப் பூசிய 8-நிமிஷத்திற்குள்ளாக நரைப்பதற்கு முன் இருந்த கருமை நிறத்தையும் பளபளப்பையும் உண்டுபண்ணும். மேலே கூறியுள்ள விகாரகுணங்கள் இதில் கிடையாது. இதைப் பூசிய பிறகு முகலட்சணமும் விகாரமுமுண்டாகிறபடியால் வயோதிகரும் வாலிபரைப்போல் தோற்றப்படுவார்கள். இது உண்மை. இதைப்போன்ற தைலம் வேறெங்கும் கிடையாது. வேறு எந்த விதமான கெட்ட குணங்களும் இதில் இல்லை. இந்த அருமையான தைலத்திற்கு கிடைத்திருக்கும் கனவான்களுடைய சர்டிபிகேட்டை கணக்கிட முடியாது. இதை உபயோகிக்கும் விதம் பார்சலோடு வைத்து வரும் ரூ. 1.



## கூந்தல் வளரும் துளிகள்.

இதை நல்லெண்ணெய் அல்லது தேங்காயெண்ணெயிலகலந்து பிரதிதினம் மயிருக்குப் பூசிவந்தால் கூந்தலானது ஆலம்விழுதுபோல் உன்னமையாய் வளரும். பேன் சேராது, பொடுகு உண்டாகாது, மயிர் உதிராது, வழுக்கையான இடத்திலும் மயிர் முளைக்கும்.

புட்டி 1-க்கு அணா 12.



## அயத்தங்கதிராவகம்

**அபூர்வமானது! பிரசித்தியடைந்தது!! சஞ்சீவிபோன்றது!!!**



மித்திரர்களே! இந்த அபூர்வ மருந்தானது அநேக கொடிய வியாதிகளை ஆச்சரியமாய் கண்டிக்கக்கூடியது இதை அநேக ஆயிரக்கணக்கான ஜனங்கள் உபயோகித்துச் சந்தோஷிக்கின்றனர். வியாதியினாலாவது வேறு எந்தக் காரணத்தினாலாவது இளைத்துப் போயிருக்கும் தேகத்தைப் புஷ்டியாக்கி பலவீர்யத்தைத் தருவதில் இது நிகரற்ற மருந்தாகும் ஆங்கிலேய முறைப்படி தயாரிக்கப்பட்ட அருமையான மருந்து. சாப்பிடுவதற்கு மிக இன்பமாயிருக்கும். இருமல் ரோகம் கண்டு அவஸ்தைப்படுபவர்கள் இதை உட்கொண்டால் இரண்டே வேளையில் ஆச்சரியமான சுகத்தை படைவார்கள். இதனால் நீங்கூடிய அநேக வியாதிகளில் முக்கியமான சிலவற்றை இங்கே குறிக்கிறோம்.

நரைத்த மயிரைக் கறுப்பாக்கும் உஷ்ணத்தினாலாவது புழுவெட்டினாலாவது மயிர் உதிர்வதை நிறுத்தும், நீர் வியாதிகள் நீங்கும். கண்ணெரிச்சல் கைகால் காந்தல் இவை நீங்கும். முகவசீகரத்தை உண்டாக்கும். தேக அசதியை ஓட்டும். ஜீரண சக்தியையும் நல்ல பசியையும் உண்டாக்கும். மனதை அதிக உற்சாகப்படுத்தும். நரம்புகளுக்கு அதிக வலுவைத் தரும். தேகத்தில் நல்ல இரத்தத்தைச் சம்பிக்கும். க்ஷயரோகத்தை ஆரம்பத்தில் நீக்கும், வாத பித்த சிலேத்துமத்தாலுண்டாகும் ரோகங்களை நிவர்த்திக்கும். சப்த தாதுக்களுக்கும் நல்ல பலத்தைத்தரும். மூலக்கடுப்பு மூலவாய்வு மலச்சிக்கல் இவை நீங்கும்.

இந்தச் சஞ்சீவியை நல்ல போஜனத்துடன் 15-நாள் சாப்பிட்டால் இணையில்லாத ஆனந்தத்தைத்தரும். இளைத்துபோன தேக நிறத்தைப் பழையபடி படைவதற்கு இதைவிட வேறு மருந்தே கிடையாது. 40-நாள் மருந்து உட்கொள்ளும் பக்ஷத்தில் வியாதி என்பதே அம்மனிதனின் நிழலைக்கூட அணுகாது, தேகம் வஜ்ஜிரமேயாகும்: இதற்கு யாதொரு பத்தியமும் கிடையாது. 20-நாள் மருந்து ரூ. 1. 40-நாள் மருந்து ரூ. 1 12 0.

## சிவப்பிரகாச பல்பொடி.



இந்த சிவப்பிரகாச பல்பொடி மற்ற இதர பல்பொடிகளைப்போல விராமல் அதிக சுகந்தமாயும் பல்வலி, பல்லில் சொத்தை, ஈர் வீங்கிருத்தல், வாய்ரணம், வாய்நாற்றம், பல்லாட்டம் முதலியவியாதிகளை சொஸ்தப்படுத்துவது மல்லாமல் பல் நன்குப் துலக்கும்படிச் செய்யும், வாய்க்கு சதா சுகமென்று பரிமளத்தைக்கொடுக்கும். ஒரு மாதத்திற்கு உபயோகிக்கக் கூடிய பல்பொடி டப்பி 1-க்கு விலை அணா 2. 6-டப்பிகள் விலை அணா 10.

## நாக்குப்பூச்சியை நாசமாக்கும் பில்லைகள்.

இந்த பில்லையில் ஒரு வருடத்து குழந்தைகட்கு அரை பில்லையும் மற்றவர்கட்கு 1 அல்லது 2 பில்லை வீதம் கொடுத்தால் வயிற்றிலுள்ள கிருமிகள் யாவற்றும் பத்து பத்தாய் வந்துவிடும். 8-பில்லைகள் விலை அணா 6.

# நாராயண சஞ்சீவி தைலம்.

[illegible]



[illegible] ரூபா 1. [illegible]

## ஸ்ரீ. கியூர் வெள்ளை என்றும்

## கள்ள நோயை 3 தினத்தில் குணப்படுத்தும் மருந்து.

[illegible]



[illegible] புட்டி 1-க்கு ரூபா 1

## பினாக் பர்ட் பௌண்டன் பேனா.



[illegible] 1—0—0

[illegible]



## கண்ணோய் குப்பி.



[illegible] புட்டி 1-க்கு அணா 8.



## கர்ணபிந்து.

[illegible]

புட்டி 1-க்கு அணா 4.

[illegible]

## ஸர்வபடை ஸம்மாரன்.



[illegible]

புட்டி 1-க்கு அணா 4.

## ஓட்டோலீஸா.

[illegible]



[illegible] புட்டி 1-க்கு அணா 10.

[illegible] பெரிய புட்டி 1-க்கு ரூபா 1.

## மயிர் போக்கும் சூரணம்.

[illegible] புட்டி 1-க் [illegible] ரூபா 5

# சர்வமேக நிவாரணி தைலம்.

இந்த பிரசித்திபெற்ற இராஜசஞ்சீவி நிராகரத்தை காலை மாலை இரு வேளையும் 10 நாளைக்கு உட்கொண்டால் வெகு நாளாய் தேகத்தில் ஊறிய மேக ரோகங்கள், மேக வாய்வு, தனுர்வாதம், முழங்கால்வாதம், குதிக்கால்வாதம், சலமான தடிப்புகள், மேகரோகத்தால் உண்டான வெடிப்பு சிரங்கள், குழிப் புண்கள், புரையோடுகிற புண்கள், நிமிர் வாய்வு, கைகால் விரல்களில் மேகநீர் தங்கிய ரோகங்கள், ஒரக்கிரு முதலிய ஒரக்கிருபுண்கள், தடைவாரைமடைகள், சக்கனுநோய், சகல மூலங்கள் முதலிய ரோகங்கள் நெருப்பிலிட்ட பஞ்சுபோல் போகும். அநேக ஜனங்களின் நன்மத்தைக்கேகிச் சௌக்கியத்தை உண்டுபண்ணி அதிக அனுபவத்திற்கு வந்தது, கடின பத்தியமின்றி பால், நெய், சரி முதலியவைகளுடன் சாப்பிடக்கூடியதும் பேதி, இளைப்பு, ஆயாசம் முதலியவைகளின்றி, சுகமாய் வியாதிகளைக் கண்டித்து சுகப்படுத்தக்கூடிய உண்மையான மருந்து. விலை ரூபா 1-8-0.




## காப் கியூர் என்னும் க்ஷய அரி.



கப இருமல், இரைப்பு, அல்லது மந்தாசம், க்ஷயம், சளி இருமல், கக்குவா இருமல், பெருத்த இருமல், தொண்டை நோய், சுவாசகாசம், கடினமான ஜலதோஷம், அபாயமான ஈழை இருமல், தொண்டை யெரிச்சல், தொண்டை கரகரப்பு, இருமலினால் தூக்கம் பிடியாமை, குளுமையான வஸ்துவை சாப்பிடுகிறதினாலும் பனியில் நனைவதினாலும் உண்டாகும் சாதாரண இருமல் இவை முதலான வியாதிகளை சாது தினத்தில் கண்டித்து கோழையை வெளியில் தள்ளி நன்றாய் தூக்கச்செய்யும். புட்டி 1-க்கு ரூபா 1

ஐந்தரை முழ நீளம் இரண்டரை முழ அகலம்.

## நேர்த்தியான பட்டு அங்கவஸ்திரங்கள்.



நாகரீகமும் அழகும்வாய்ந்த இந்த நவீன பட்டு குட்டை வேண்டியவர்கள் இச்சமயத்தில் காலம் போக்காமல் இன்றைக்கே எழுதுங்கள். செலவழிந்துவிட்டபின் 10 ரூபாய் கொடுத்தாலும் இப்படிப்பட்ட குட்டை கிடைக்காது என்பது உண்மை! உண்மை!! மிகவும் நேர்த்தியான பனாரஸ் போடும் கூடியபட்டினால் செய்யப்பட்ட இக்குட்டைகளை ரசில் சுற்றிக்கொள்ளவும் கமிஸ், குடித்தினி, கோட் முதலிய சொக்காய்களின் மேல்போடும் துப்பட்டாக்களாகவும், ஸ்திரீகள் மேலாக்காகவும் சிறு பெண்பிள்ளைகள் தாவணியாகவும் அங்கவஸ்திரமாகவும் உபயோகிக்கலாம் இதில் பச்சை, வெள்ளை, சிகப்பு, வெண்சிகப்பு, ரோஸ், ஊதா நீலம், மஞ்சள், மேகவர்ணம் முதலியபல நிறங்கள் உண்டு. வேண்டுவோர் இன்ன குட்டை வேண்டுமென்று எழுதியனுப்பவும், விலை 1-க்கு ரூபா 2—8—0.

செம்பட்ட லட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

...லாசம்:- தனலட்சு...

அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்ற (ரிஜிஸ்டர்ட்)

# "சகுந்தலா" கூந்தல் வளரும் பரிமளத் தைலம்




ஆழாக்கு எண்ணெய் அடங்கிய புட்டி 1-க்கு அணா 12

இத்தைலத்தின் மனோஹரமுடைய பரிமளம் சொல்லமுடியாது தலையில் தடவி சீவிக்கொண்டால் அக்கம் பக்கம் வீடுகளுக்கும் இதின் வாசனை வீசும். கூந்தலை நீளமாக வளரச்செய்யும். மூளையின் கொதிப்பைத் தணியச்செய்யும் கண்களுக்குக் குளிர்ச்சியைத் தரும். சிரசிலுள்ள பல வியாதிகளையும் நிவர்த்திசெய்யும். கண்ணில் நீர்வடிதல், தலையில் புண், மயிர் வெடிப்பு, மயக்கம், தலைச்சுற்றல், தேக நமைச்சல், சொறி, சிரங்கு, கற்றாழை நாற்றம், மனோ வியாகூலம், ஞாபகமறதி இவைகளைப் போக்கடித்து தேக ஆரோக்கியத்தைத் தந்து வாசனையை உண்டாக்கும். முகதேஜஸ் உண்டாகும். உயர்ந்த தைலம். சிலர் கோரியபடி அநேக திவ்விய வனமூலிகைகளால் சாஸ்திரப்படி தயார்செய்து ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ளது. ஒரு டின் தைலம் வாங்கிப் பார்த்தால் அருமை பெருமை விளங்கும்

# கிருஷ்ண சஞ்சீவி




தலைநோய், பாரிசவாய்வு, சுளுக்கு, புண்கள், காயங்கள், வீக்கங்கள், கொப்பளங்கள், கட்டிகள், இருமல், மூச்சடைப்பு, தேள் கொட்டின விஷம் இவைகளுக்குத் தேவதாப்பிரசாதம் நோய் கண்ட இடத்தில் இந்த கிருஷ்ண சஞ்சீவியை நன்றாய் இரண்டு மூன்று நிமிஷம் தேய்த்தால் பாதைகள் மாயமாய் ஓடிவிடும். இளங் குழந்தைகளுக்குக் காணும் சைத்திய நோய்களுக்கு உபயோகிக்கலாம். ஆயிரக் கணக்காகச் செலவழிந்துகொண்டு வருகிறது. ஒவ்வொரு குடும்பத்திலும், பிரதி பிராணிகள் கையிலும் இந்த கிருஷ்ண சஞ்சீவி இருந்தே தீரவேண்டும்.

இதன் விலை புட்டி 1-க்கு அணா 8. டஜன் 1-க்கு ரூபா 5

விலாசம்:- தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, ம...

# ஆனந்தபோதினி

காகித விஷயமாய் சேகப்ப பிரதிகளே மிஞ்சும்படி கேசிட்டது.




இப்போதிருப்பவை கீசு சொற்ப பிரதிகளே

ஆனந்தபோதினி 3-ம், 5-ம், 6-ம், 7-ம், 8-ம், 9-ம், 10-ம் ஹ புத்தகங்கள்
முழு காலிகோவில் நேர்த்தியாக பைண்ட் செய்யப்பட்டவை.

*புத்தகசாலைகளை அழகுபடுத்தத் தகுதியானவை. பல அரிய விஷயங்கள் அடங்கிய இப்புத்தகங்கள் எப்போதும் சிறந்த நூல்கள்போல் உபயோகமாயுள்ளன என்ற விஷயம் யாவருமறிந்ததே. ஒவ்வொன்றும் சுமார் 500-பக்கங்கள் அடங்கியது.*

ஒவ்வொன்றும் விலை ரூபா 1-6-0; *தபால் கூலி பிரத்யேகம்.*

ஒரு வருடத் தனி சஞ்சிகைகள் 12-ம் விலை . ரூ1-0-0; *தபால் கூலிவேறு*
1-வது ஹ பைண்ட் புத்தகம் விலை ரூ. 1-12-0; *தபால்கூலி வேறு.*

---

Printed & published by N. Munisawmi Mudaliar, at the
"Ananda Bodhini" Power Press,
[redacted] 5, Venkatesa Maistry Street, Sowcarpet, Madras.